331

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

5 - JUL 193?

| தொகுதி ௬ | ஆங்கிரச ஹு வைகாசி மீ | பகுதி ௩ |
|---|---|---|

## உள்ளடக்கம்

கடவுள் வணக்கம் .... 105
பத்திரிகாசிரியர் முன்னுரை:—ஒரு வேண்டுகோள் .... ,,
,, ,, செவிடன் காதி லூதிய சங்கு .... 106
புது உலகமும் பழைய உலகமும் :—மோடார் மன்னன் .... 107
ஞானசாகாரது சாட்சியம் .... 109
ஜீவகாருண்யம் .... 111
சுகாதாரப் பகுதி:—இந்திய உணவு .... 114
செங்குந்த யாத்திரைவாசி .... 115
இளைஞர் பக்கம் :—சிறுகதைச் செய்யுட் கோவை .... 118
ஆ. வே. முத்தைய முதலியார் அவர்களுக்குப் பாராட்டு நல்லுரை 121
,, ,, ,, உபசார வாழ்த்துப் பாக்கள் 122
நிருபம் ... 123
சிறந்த வழி .... 125
கிளர்ச்சி ... 126

காரியாலயம் :—2/17, பவழக்கார தெரு, சென்னை.

# செங்குந்தர் கல்விநிதி

"கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை"

பல சிறு துளி! ஒரு பெரு வெள்ளம்!!

பல்வேறு சமூகங்களும் முன்னேற்றத் துறையி லீடுபட்டு மேலோங்கி யெழப் பெரும் பாடு பட்டுவரும் இக்காலத்தில், ஏனைய சமூகங்களோடு சமமான நிலையில் நிற்றற்கும், உலகப் போட்டியிற் கலந்துகொண்டு மேன்மை யுறுதற்கும் நங்குலத்தினர் உலகப் போக்கை நன்குணர்ந்து கைத்தொழில் முதலிய பல துறைகளிலும் திறமை பெறுவது இன்றியமையாததாகும். அவ்வாறு நம்மைத் தயார் செய்துகொள்வதற்கு மற்றெல்லாவற்றினும் சிறந்த சாதனம் கல்வியேயாகும். அதுவே நமது பண்டைப் புகழினையும் அந்நிலைக்கு நேர்முரணாக நாம் தற்போது அடைந்துள்ள தாழ் நிலையினையும் கண்ணாடி போல் நமக் கெடுத்துக் காட்ட வல்லது. அம்மட்டோ? நாம் அத்தகைய தாழ்வுக் கடலினைக் கடந்து மேன்மைக் கரையினை யடைதற்கேற்ற தெப்பமாய் உதவுவதும் அதுவே. சுருங்கக்கூறின், நமது சமூகத்தினரைப் பல துறைகளிலும் முன்னேற்றி மேம்படுத்த வல்லது கல்வியே யாகும். அதனை யுணர்ந்தே நமது தலைச் சங்கத்தாரும், நமது குலச் சீர்திருத்தத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அதனை முதற்படியாகக் கொண்டு உழைத்து வருகின்றார்கள்.

ஆனால், கல்விப் பொருளினை நமது மக்களிடைப் பரப்புவதற்குச் செல்வப் பொருள் பெரிதும் அவசியமாயுள்ளது. உலகத்திலேயே பேரறிஞராகத் திகழக்கூடிய பல பிள்ளைகள் வறுமையின் வாய்ப்பட்டு, அல்ல லுழன்று, பாறையில் விதைத்த செழுவிதை போன்று பெயர் தெரியாது மறைந்து கிடக்கின்றனர். அத்தகையோர் தளிர்த்துச் செழித்து, ஓங்கி வளர்ந்து, அறிவு, ஆராய்ச்சி முதலிய நறுமண மலர்களையும் தீங்கனிகளையும் உலகினர்க்குத் தந்துதவுமாறு பொருளுதவி புரிதலினும் சிறந்த தானமுண்டா? தருமந்தானுண்டா? அன்னதானம் முதலிய தானங்கள் ஒருவ ரிருவருக்கு ஒரு சமயத்தில் திருப்தியும் நன்மையும் அளிக்கலாம். கல்வி தானமோ, உலகமுழுதும் பேரொளியைப் பரப்ப வல்லதொரு ஆற்றல் சான்ற அறிவுப் பிழம்பையே உண்டாக்கினும் உண்டாக்கலாம்.

அதனாலேயே, ஏழ்மையால் வருந்தி வாடும் நங்குல மக்களுக்குக் கல்விச் செல்வத்தை வழங்குவதற்காக நமது தலைச்சங்கத்தார் செங்குந்தர் கல்விநிதி யெனும் நிதியொன்றை யேற்படுத்தி யுள்ளார்கள். அதன் உதவியைக் கொண்டு தற்போது சுமார் 30 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். அதன் பயனாக நம்மவரிடைப் பட்டதாரிகளது தொகையும் வருஷா வருஷம் அதிகரித்து வருகிறது. மேலும் மேலும் அதிகமான மாணவர்க்கு உபகாரச் சம்பளம் முதலிய உதவிகள் செய்யவேண்டு மென்பது நமது தலைவர்களது நோக்கமாக உள்ளது. வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வந்து கல்வி பயிலும் மாணவர்க்கு உண்டி, உறையுள் முதலிய வசதிகளை யளிப்பதற்காகவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆனால், இந்நோக்கங்க ளெல்லாம் நிறைவேறுவதற்கு இந்நிதி பன்மடங்காகப் பெருக வேண்டும். சுபகாரியங்களில் நன்கொடை யளித்தல், சம்பாதனையில் ரூபாய்க்குத் தம்பிடி யளித்தல் முதலிய பல வழிகளில் அதனைப் பெருக்க வேண்டுமெனவும் நமது மகாநாட்டில் தீர்மானம் நிறைவேறியுள்ளது. பல புண்ணிய சீலர்களும் அவ்வழிகளில் தாராளமாக வழங்கிக்கொண்டு வருகின்றார்கள். ஆயினும் கல்விநிதி போதிய அளவு விருத்தியடைவதற்கு நன்கொடைகள் இன்னு மதிகமாக வழங்கப்படல் வேண்டும்.

ஆகவே, செல்வச் சீமான்களே! குலாபிமானிகளே!! உங்கள் சோதரர்கள் மேன்மையடைய வேண்டுமானால், நமது குலம் மேலோங்க வேண்டுமானால், நாமும் நமது முன்னோரைப் போன்று வீரர்களாய், அறிஞர்களாய், கைத்தொழில் நிபுணர்களாய், சீர்குலத் தோன்றல்களாய்த் திகழ வேண்டுமானால் நமது கல்விநிதிக்கு,

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் லருளீர்! ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!

---

கல்விநிதிக்கு நன்கொடை யனுப்புவோர்,
திரு. மா. பா. கந்தசாமி முதலியார், B. A., B. E.,
அமைச்சர், செங்குந்தர் கல்விநிதி,
'காமாக்ஷி விலாசம்', போஸ்டல் காலனி, மாம்பலம்,
தேனாம்பேட்டை P. O., சென்னை என்னும் விலாசத்துக்கு அனுப்பவும்.

331


# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி—௬] ஆங்கீரசவ௵ வைகாசிமீ [பகுதி—௫


### கடவுள் வணக்கம்

பாவியேன் படுந்துயருக் கிரங்கி யருட்டணிகையி லென்பால் வாவென்று
கூவிநீ யாட்கொள ஓர் கனவேனுங் காணேனோ குணப் பொற்குன்றே
ஆவியே அறிவே யெனன்பே நின்னடியைச் சற்றும்
சேவியேன் எனினுமெனைக் கைவிடேல் அன்பர் பழி செப்புவாரே. (திருவருட்பா.)

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### ஒரு வேண்டுகோள்

குலப்பணி யொன்றினையே குறியாகக் கொண்டு தமது சொந்த சௌகரிய மொன்றையுங் கருதாது ஊக்கத்தோடும் ஆர்வத்தோடும் தொண்டாற்றிவரும் நமது பிரசாரகர்கள் உண்மை புணராத நங்குல மக்கள் சிலரால் எத்துணைக் கஷ்டங்கட் குட்படுகின்றார்க ளென்பதைப்பற்றி முன்னொரு தடவை முறையிட்டுள்ளோம். அதிற் கவனம் செலுத்திய அன்பர்கள், எல்லாவற்றினும் அதிகமாக அவர்கட்குக் கஷ்டமளிப்பது சந்தா வசூலே யென்பதை யறிவர். குல முன்னேற்றத்திற் கென்றே பல அரிய விஷயங்களைத் தாங்கிப் பல நாடுகள் தோறும் உலவிவரும் நமது மித்திரனை வரவழைத்துக்கொண்டு, அவனுக்காக வருடத்துக்கு ஒன்றரை ரூபாய்—மாதம் 2 அணா—தினம் ஒரு தம்பிடி கூட ஆகவில்லை—கொடுக்க மனமில்லாது எத்தனைக் "குலாபிமானிகள்" எவ்வளவு சாமர்த்தியமாகச் சாக்கு சொல்லுகின்றார்கள் என்பதையும் அன்பர்கள் அறிவர். இத்தகைய 'குலாபிமானிகள்' தபாலாபீஸை ஒரு பேராதரவாகக் கொள்ளுகின்றார்களென்பதைக் கேட்க எமது மனம் வருந்துகிறது. வருட முழுதும் பத்திரிகை பெற்றுக்கொண்டிருக்கும் சிலர், "அது என்னவோ, எனக்குப் பத்திரிகை வரவே யில்லையே" என்கின்றனர். சிலர், "இந்த வருடம் எனக்கு மூன்றே பத்திரிகைகள் தானே வந்தன? நான் எப்படி ஒரு வருஷச் சந்தா கொடுப்பது?" என்கின்றனர். இங்ஙனம் கூறும் நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள். வெளியூர்களிலுள்ள தபாலாபீஸ்களை நாம் ஆதரிக்க முன்வரவில்லை. ஆனால், ஆவலோடு பத்திரிகையை எதிர்பார்த்திருக்

கும் அன்பர்கள் அது வாராவிடின் உடனே அதைப் பற்றித் தம்மூரிலுள்ள தபாலாபீஸில் விசாரித்து, அங்கும் சரியான தகவல் கிடைக்காவிடின் 'மித்திரன்' காரியாலய மானேஜருக்கு அறிவிப்பதே சரியான முறையென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். அங்ஙனமின்றி 'ஏனோ தானோ' வென விருந்துவிட்டுப் பிறகு பிரசாரகர்களை வம்புசெய்வது நியாயமாகுமா? அப்படிச் செய்யின் மித்திரன் வளருவதெங்ஙனம்? நங்குலம் முன்னேறுவதுதா னெங்ஙனம்? அப்படித்தான் சந்தா கொடுக்காமல் ஏமாற்றிவிட முடியுமா?

---

## செவிடன் காதி லூதிய சங்கு

உலகத்தில் தற்போ தேற்பட்டிருக்கும் பண நெருக்கடியால் விளையும் இன்னல்களை மற்ற மக்களைக் காட்டிலும் அதிகமாக அனுபவித்து வரும் நங்குலத்தினர் அவற்றினின்றும் தப்புவதற்கான வழிகளை ஆராய்வது மிகவும் அத்தியாவசியமாகும். நம்மவர் ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள நெசவுத் தொழிலில் பல வருஷங்களாக இருந்து வரும் மேனாட்டுப் போட்டியும் உள்நாட்டு யந்திரப் போட்டியுமே அத்தகைய பணநெருக்கடிக்குக் காரணமாகும். தினமும் நவநவமான துணிகளை ஆயிரக்கணக்கில் உற்பத்தி செய்யும் மிகப் பெரிய வியாபாரிகளோடு சாதாரணமான கைத்தறிகள் சிலவற்றை வைத்துக்கொண்டு பழைய முரட்டு ஆடைகளையே சொற்பமாக நெய்து வரும் நம்மவர் போட்டி போடுவ தெங்ஙனம்? அதனாலேயே நம்மவர் உழைப்புக்குத்தக்க ஊதியம் பெறாது வறுமைப் பிணியின் வாய்ப்பட்டுக் கூக்குரலிடுகின்றனர். ஆகவே, நம்மவரிடை யேற்பட்டுள்ள பணநெருக்கடியைப் போக்கும் பொருட்டு நமது கைத்தொழில் முறைகளைச் சீர்திருத்துதற்கான வழிகளை ஆராய்வது இன்றியமையாததாகும்.

இத்தகைய ஆராய்ச்சியில் வெகு மும்முரமாகத் தலையிட்டுச் சீக்கிரமாக ஏதோ ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றிய திருநெல்வேலிச் செங்குந்தர்களது ஊக்கத்தைப்பற்றி எமது மனமகிழ்ச்சியைத் தெரிவித்திருந்தோம். ஆனால், அவர்களபிப்பிராயத்தோடு மற்றப் பாகங்களிலுள்ள செங்குந்தர்களது அபிப்பிராயங்களும் கலக்க வேண்டுமென்னும் நோக்கத்துடனும், அவர்கள் நிறைவேற்றிய தீர்மானம் [illegible]லேயே பயனளிக்கக்கூடியது தான [illegible] பலாது அபிப்பிராயங்களும் தெரியவேண்டு மென்னும் நோக்கத்துடனும் அதை நமது மித்திரனில் விளம்பரப்படுத்தியதுடன், அதுபற்றிய அபிப்பிராயங்கள் பலரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன வென்றும், அதற்காக மித்திரனில் சில பக்கங்கள் ஒதுக்கி வைக்கப் போகின்றோ மென்றும் எழுதியிருந்தோம். ஆனால் விசனிக்கத்தக்க விதமாக, அதனை எவரும் கவனிக்காமலே விடுத்தனர். முதலில் வெகு மும்முரமாகப் பெருங் கூட்டங் கூட்டி முடிவு கட்டி, அதைப்பற்றித் தினசரிப் பத்திரிகைகளிலும் விளம்பரஞ் செய்த திருநெல்வேலிச் செங்குந்தர்களும் அதற்குப் பின் என்ன செய்தார்கள், தங்கள் தீர்மானத்தை எவ்வளவு நிறைவேற்றினார்கள், அதனால் எத்துணைப் பயன் அடைந்துள்ளார்கள் என்பவற்றைப்பற்றி யொன்றும் தெரியவில்லை. வறுமையினின்றும் விடுதலையடைவது அவசியமல்லவா? அவ்வாறு அடையும் பொருட்டு நாம் செல்லக் கருதும் புதிய பாதை கற்களும் முட்களும், கஷ்டமும் அபாயமும் நிறைந்ததா, நேராகவும் ஒழுங்காகவும் உள்ளதா எனவும், அதைவிடச் சிறந்த வேறு பாதைகளும் உளவா எனவும் ஆராய்வது அவசியமல்லவா? இத்தகைய முக்கியமான விஷயத்தில் நம்மவர் ஒரு துளி சிரத்தையும் காட்டாது, தாம் அழுந்திக் கிடக்கும் தாழ்மைக் குழிக்குள்ளேயே தமது பார்வையைச் செலுத்தி அதினின்றும் மேலேறுதற்கான வழிகாணாது தயங்குவது மிகவும் வருந்தத்தக்கதாகும். இனியேனும் நம்மவர் இத்தகைய அசிரத்தையையும் உறக்கத்தையும் விடுத்து, உலகப் போக்கை யுணர்ந்து, தாம் முன்னேறுதற்கான முறைகளை ஆராய்ந்து தக்கவற்றைக் கடைப்பிடித்துப் பயன்பெற முற்படுவார்களென நம்புகிறோம்.

158908 1-58908

## இவ்வருடம் பட்டம் பெற்ற பட்டதாரிகள்

திரு. S. P. ஸ்ரீராம் முதலியார், எம். ஏ. (சென்னை புதுப்பாக்கம் எஞ்சினியர் திரு. S. P. அய்யாசாமி முதலியார் குமாரர்).

திரு. [illegible]வேல் முதலியார், பி. ஏ., எல். டி. (காஞ்சிபுரம்).

திரு. ம. சம்பந்த முதலியார், பி. ஏ. (ஆசிரியரவர்களது சகோதரர்).

1-58908






## மோடார் மன்னன்

[வேலன்]

பதிப்புரிமை

"பாம்-பாஅம்" என்னும் சப்தம் உலகத்தின் எந்த மூலையிலும் ஒலிக்கின்றது. குக்கிராமங்களிலும் மோடார் இரதங்களின் காட்சி நிகழ்கின்றது. சொற்ப வருமான முள்ளவர்களும் மோடார் இரதத்தா லேற்படும் பெரும்பயன்களை அனுபவித்து வருகிறார்கள். அரையணாவுக்கும் மோடார்கள் ஆட்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஏற்றிச் செல்கின்றன. ஏன்? குப்பை வாரிச் செல்வதற்கும் மோடார்கள் உபயோகிக்கப் படுகின்றன. சுருங்கக்கூறின், பரம ஏழையும் மோடார் சுகத்தை அனுபவிக்கின்றான்; எவ்வளவு சாதாரணமான வேலைக்கும் அது உபயோகிக்கப் படுகின்றது. இவ்வளவு அதிகமாக—கோடிக்கணக்கில்—மோடார்கள் பெருகிவிட்டன. மோடார் சவாரி செய்வது மிகப்பெரிய தனவந்தர்களாலேயே அனுபவிக்கக்கூடிய சுகம் என்று கருதி வந்த காலமும், வீதியிற் போகும் மோடார் இரதத்தைத் தெய்விக விமானம்போல் பார்த்து மக்கள் விம்மிதமுற்ற காலமும் மலையேறிவிட்டன.

இவ்வாறு கோடிக்கணக்கான சாதாரண மக்கள் மோடாரா லேற்படும் பயனையும் சுகத்தையும் அனுபவிப்பதற்குக் காரணபூதரா யிருந்தவர், தமது கூர்மையான அறிவினாலும், குன்றாத ஊக்கத்தினாலும், சலியாத உழைப்பினாலும் மிகப் பெருங் கஷ்டங்களைத் தாண்டிக்கொண்டு, உறுதியான ஒரே நோக்கத்துடன் முயன்று, தற்போது உலகப் புகழ்ச்சிக்கும் நன்றிக்கும் பாத்திரராகவும், "எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியார் திண்ணிய ராகப்பெறின்" என்னும் திவ்விய மொழியினுக் கெடுத்துக்காட்டாகவும் இலங்கும் ஹென்றி போர்டே (Henry Ford) யாவர். அவரது மோடார்கள் அவர் பெயரை உலகமெங்கும் பரப்பிவிட்டன. இந்தக் கோளத்திலுள்ள கோடீஸ்வரர்களுக்குள்ளேயே அவர் முதன்மை ஸ்தானம் வகிப்பவர் என்பதை உலகமுழுதும் அறிந்திருக்கிறது. ஆனால் அத்தகைய உன்னத நிலையினை அடைதற்கு அவர் எவ்வளவு அரும்பாடு பட்டார் என்பதை அநேகர் அறியாதிருப்பர். ஒரு ஏழைக் குடிசையிலே மிகவும் கஷ்டப்பட்டு உணவு தேட வேண்டிய நிலையிலே பிறந்து, சுமார் இருபது வருஷ காலத்தில் குபேர சம்பத்தெனப் பாராட்டக்கூடிய சம்பத்தையும் உலகப் பிரசித்தியையும் தேடிக்கொண்டு மோடார் மன்னனாகப் போற்றப்படும் அவரது வாழ்க்கை ஒரு மகேந்திர ஜாலம் போல் தோன்றுகிறது. ஆனால் அத்தகைய சம்பத்து அவருக்கு அகஸ்மாத்தாய்க் கிடைத்துவிடவில்லை. அத்தகைய சம்பத்தினை அவர் கண்ணை மூடிக்கொண்டு கண்டெடுத்துவிடவில்லை. அவரது நுட்பமான அறிவே அவரது நோக்கத்தை நிறைவேற்றியது; அவரது உறுதியான உழைப்பே அவருக்குக் கோடீஸ்வரப் பதவியை யளித்தது; அவரது இடைவிடா முயற்சியே திருவினை யாக்கியது.

பூலோக அளகாபுரியெனப் போற்றப்படும் புதிய உலகத்தில் மிச்சிகன் என்னும் நாட்டில் டீயர் பார்ன் என்னுங் கிராமத்தில் 1863-ஆம் வருஷம் ஜூலை மாதம் 30-ஆந் தேதி ஒரு ஏழைக் குடியானவர் வீட்டில் ஹென்றி போர்ட் தோன்றினார். தமது மகனது அதிர்ஷ்டத்தை உணராத தந்தை போர்டும் அவரோடு அண்டையில் வாழ்ந்த குடியானவர்களும் அவரது வயலையே ஹென்றியும் தமது காலத்தில் பார்த்து வருவாரெனக் கருதினார்கள். ஆனால் ஹென்றி மட்டும் இளம்பிராய முதற்கொண்டே யந்திரங்களைப்பற்றிய ஆராய்ச்சியில் ஊக்கங் கொண்டிருந்தார். பயிர் வேலைகட்கு உபயோகப்படக்கூடிய யந்திரம் எதுவும் கண்டுபிடிக்கப்படாத அக்காலத்தில் யந்திரங்களைக் கொண்டு கடினமான வேலைகளைச் சுலபமாகச் செய்யலாமென்றும், அதனால் ஆட்களால் செய்யப்படுவதைப்போல் பன்மடங்கான வேலையைச் செய்ய இயலுமென்றும் அவர் யோசித்துக்கொண்டிருந்தார்.

வயதாக ஆக, ஜனங்களைச் சுலபமாகவும் துரிதமாகவும் ஏற்றிச்சென்று அவர்களது கஷ்டத்தைக் குறைக்கக்கூடிய சரசமான மோட்டார் காரே

உலகத்திற்கு அத்தியாவசியமானது என அவர் எண்ணங் கொள்ளலானார். அவரது வாழ்க்கையில் பனிரண்டாவது வயது மிக முக்கியமானதாகும். அந்த வருஷத்தில், குதிரைகளின்றி நீராவியினால் ஓட்டப்படும் சாலை மிதிக்கும் யந்திரமொன்றை அவர் கண்டார். அது முதல், அதைவிட மேலானதும் எல்லோரும் வாங்கக்கூடியதுமான யந்திரத்தைச் செய்யவேண்டு மென்னும் ஆர்வம் அவருக்கு உண்டாயிற்று. அதுவே தமது நோக்கம் நிறைவேறுதற்கு முதற்படியெனக் கருதிய அவர், தாம் அதுவரை சேகரித்துவைத்திருந்த ஆணிகள் முதலிய இரும்பு சாமான்களைக் கொண்டு தாம் கண்டதுபோன்ற யந்திர மொன்றைச் செய்து முடித்துத் திருப்தி யடைந்தார். அதே வயதில் அவருக்கொரு கடிகையாரம் கிடைத்ததும் அவருக்கு அனுகூலமாயிற்று. அதையே அவர் தமது ஆராய்ச்சிக்கேற்ற யந்திரமாக உபயோகப்படுத்தினார். அதன் பாகங்களைத் தனித்தனியாகக் கழற்றுவார். மீண்டும் அவற்றை யெல்லாம் பூட்டுவார். இவ்வாறு கடிகையாரங்களின் அமைப்பை அவர் நன்றாக உணர்ந்துகொண்டு வேடிக்கையாகத் தமது நண்பர்களது உடைந்த கடிகையாரங்களைப் பழுது பார்ப்பார். இந்தப் பழக்கத்தால் அவர் பதினைந்தாவது வயதுக்குள் கடிகையாரங்களைப் பழுது பார்ப்பதில் நிபுண ராய்விட்டார்.

ஹென்றியின் திறமையை புணராத அவரது பெற்றோர் யந்திரங்களி லவருக் கிருந்த ஆர்வத்தை வெறுத்தார்கள். ஆயினும் அவர் 17-ஆவது வயதில் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டுத் தமதூரிலிருந்த யந்திரத் தொழிற்சாலை யொன்றில் வேலை கற்றுக்கொள்வதற்காகச் சேர்ந்தார். அங்கே மூன்று வருடங்கள் முடிவதற்குள் யந்திர விஷயங்களில் கைதேர்ந்தார். அதோடு மாலை வேளையில் வேறொருவரிடம் கடிகையாரங்களைப் பழுதுபார்த்தும் வந்தார். கடிகையாரங்களைப் பற்றிய விஷயங்களில் இவ்வாறு தேர்ச்சி பெற்றதால், எல்லோரும் வாங்கக்கூடியபடி 1 ஷி. 3 பென்சுக்கு (சுமார் ஒரு ரூபாய்) விற்கக்கூடிய நயமான கடிகையாரத்தைக் கண்டுபிடிப்பதில் அவர் எண்ணம் சென்றது. ஆனால் உலகத்தின் அதிர்ஷ்டவசமாக அவர் அந்த எண்ணத்தை விட்டுப் பழையபடியே சரசமான மோடாரைக் கண்டுபிடிப்பதில் தமது கருத்தைச் செலுத்தினார்.

வேலை கற்குங் காலம் முடிந்தவுடனே, தாம் முதலில் கண்டது போன்ற யந்திர வண்டிகளைத் தயாரித்து வந்த வெஸ்டிங்ஹௌஸ் கம்பெனியாரிடம் அவர் வேலைக் கமர்ந்து அந்த வண்டியைப் பழுது பார்ப்பதில் சிறந்த நிபுணரானார். இடையில் தாமே யொரு நீராவி வண்டியையும் செய்து முடித்தார். ஆனால் அது மிகவும் கனமாயும், விகாரமாயும், சௌகரியங்க ளற்றதாயு மிருந்ததால் அவர் அதில் திருப்தி யடையாது ஒரு லேசான வண்டியைக் கண்டுபிடிக்க முயன்று வந்தார். தற்காலத்துக் கதிகுறியாகப் பெட்ரோல் யந்திரவண்டி யொன்றை ஆராயும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்த்தது. அவனூரி லிருந்த அத்தகைய வண்டி யொன்று கெடவும், அங்கிருந்தவர்க்குள் திறமை மிகுந்தவரான ஹென்றி போர்டிடம் அது பழுதுபார்ப்பதற்காக வந்தது. அதை யாராய்ந்ததன் பயனாக, அதே முறையில் நடத்தப்படும் யந்திரமொன்றை அவர் 1885-இல் தயாரித்தார். அது அவருக்குப் பெருந் திருப்தி யளித்ததாயினும், ஜனங்கள் பெட்ரோல் யந்திரங்களைப் பொம்மை யந்திரங்களாகவே மதித்து வந்ததால் அதில் நம்பிக்கை கொள்ளவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் மீண்டும் பண்ணைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. தமது மகன் யந்திரங்களோடு வீணாகக் காலத்தைக் கழிப்பதாகக் கருதிய அவரது தந்தை, அவர் யந்திரங்களைப் பற்றிய எண்ணத்தையே விட்டுவிடுவதானால் நாற்பது ஏகரா மரங்களைத் தருவதாகக் கூறினார். ஹென்றியும் பண்ணைக்குத் திரும்பி, விவாகம் செய்துகொண்டு, மரங்களை யறுப்பதற்காக ஒரு யந்திரத்தையும் பூட்டிக்கொண்டு நிலைத்தார். 31 அடி சதுரமான ஒரு சிறு வீட்டில் போர்ட் தம்பதிகள் வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். வாழ்க்கை யெப்படி யிருந்த போதிலும் ஒரு நயமான மோட்டார் வண்டியைக் கண்டுபிடிப்பதி லவருக் கிருந்த நம்பிக்கை மட்டும் பலப்பட்டுக்கொண்டே வந்தது. பகலெல்லாம் மரவேலை செய்துவிட்டு இரவில் யந்திரங்களைப் பற்றிக் கிடைக்கக்கூடிய புத்தகங்களை யெல்லாம் அவர் ஆர்வத்தோடு வாசித்துவந்தார்.

முன்னையதைவிட மேலான புதிய பெட்ரோல் யந்திர மொன்றைச் செய்ய ஆரம்பித்த சமயத்தில் டெட்ராயிட் எலெக்ட்ரிக் கம்பெனியில் அவருக்கொரு எஞ்சினியர் உத்தியோகம் கிடைக்கவே, அவர் தமது மனைவியுடன் டெட்ராயிட் நகருக்குச் சென்றார். அந்த நகரத்தாரே 1893-இல் ஹென்றி போர்ட் தமது முதல் மோடார் ரதத்தை ஓட்டிக்கொண்டு செல்வதைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றனர். ஆனால் அது அவர்களுக்குப் பெருந் தொந்தரவாகவே யிருந்தது. மிருகங்களெல்லாம் அதைக் கண்டு மிரண்டோடும். அதனால் சாலையில் போக்கு வரவும் தடைப்படும். சில சமயங்களில் யாராவது அதை வேடிக்கைக்காக ஓட்டப் பார்ப்பார்கள். அதனால் அவர் அதை வீதியில் விட்டுப் போகும் போது ஒரு தீபஸ்தம்பத்தோடு சங்கிலியாற் பிணைத்துப் பூட்டிவிட்டுப் போகவேண்டியதாயிற்று. போலீஸாரும் அதை விரும்பாமல் அவர் அளவுக்கு மிஞ்சின வேகத்திற் போவதாகக் கூறி, அதற்காக அனுமதி வாங்கவேண்டு மென்றனர். ஆகவே ஹென்றி போர்ட் அமெரிகாவில் முதல் முதலாக மோடார் லைசென்ஸ் வாங்கினார்.

காளடைவில் போர்ட் மோடார் இரதத்தின் மதிப்பை ஜனங்கள் உணர்ந்தனர். ஒன்றாவது நம்பர் போர்டு கார் ஹென்றி போர்டையும் அவரது நண்பர்களையும் ஆயிரம் மைல்களுக்குமேல் ஏற்றிச் சென்றது. பிறகு அது 200 டாலர்களுக்கு (£ 40) விற்கப்பட்டது.

(தொடரும்)



# ஞானசாகரரது சாட்சியம்

[திரு. பி. சே. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்]

(தொகுதி 6, பகுதி 4, 90-ம் பக்கத் தொடர்ச்சி)

வக்கீல் ஞானசாகரரைச் சாட்சியாக விசாரிக்க முடியாதெனக் கூறியதும் வாதி கிருஷ்ணகோனார் வக்கீலைப் பார்த்து "இந்தச் சாட்சியை அனுப்பி விடாதீர்; இந்தப் பார்ப்பான் எப்பொழுதும் உண்மையே பேசுபவன்; ஒருபோதும் பொய் சொல்லமாட்டான். அவனைக் கேள்வி கேட்கத் தங்கட்குத் தெரியாமையால் அவன் அவ்வாறு கோணலாக நடந்துகொள்ளுகிறான். அந்தப் பார்ப்பானுக்குத் தொழில் என்ன விருக்கிறது. இந்த வீட்டில் ஒரு வேளையும் அந்த வீட்டில் ஒரு வேளையும் உணவு கொண்டு திரிந்துவரும் அவனை 'நீ ஒன்றும் சம்பாதிக்க வில்லையா?' என்று கேட்டால் அவன் என்ன சொல்லுவான்?" என்றார்.

பின்பு வக்கீல் நீதிபதியைப் பார்த்து, 'பிரபுவே! இந்தச் சாட்சிக்குத் தொழில் யாசகஞ் செய்வது எனக் குறித்துக் கொள்ளவும்' என்றார்.

இதைக் கேட்ட ஞானசாகரர் வெகுளியின் மூழ்கினவராய்க் கண் சிவக்கப் பார்த்து, "என்ன! ஞானசாகர சிரௌதி யாசகம் செய்தா பிழைக்கிறான்? நான் இதுவரை எவரிடமும் ஒரு காசும் யாசித்ததில்லையென ஆணையிட்டுக் கூறுவேன்" என்றார்.

நீதிபதி:—(சிரித்துக்கொண்டே) ஞானசாகரரே! தங்கள் தொழிலைப்பற்றி நான் என்ன எழுத வேண்டும்?

ஞான:—(கோபந் தணிந்து) எனது தொழில் பிராம்மண சந்தர்ப்பணைகளை ஏற்றுக்கொள்ளுதல் என்று குறித்துக்கொள்ளுங்கள்.

அங்குள்ளா ரனைவரும் வயிறும் புண்ணாகும்படிச் சிரித்தனர். நீதிபதி அவ்வாறே குறித்துக்கொண்டார்.

வக்:—இந்த வாதி கிருஷ்ணகோனார் தங்களுக்குத் தெரியுமா?

ஞான:—தெரியாது.

வாதி:—என்ன ஐயா! இவ்வளவு நாளாக என் பாலையும் தயிரையும் சாப்பிட்டுவிட்டு என்னைத் தெரியாது என்கிறீரே!

ஞான:—உன் பாலையுந் தயிரையும் எனக்குத் தெரியாதென நான் சொல்லவில்லை. உன் பாலை மிகச் சுலபமாக நான் தெரிந்துகொள்வேன். ஒருபடி பாலில் மூன்றுபடி ஜலம் கலந்து எரிநீரையும் தோற்கடிக்குமானால் அது கிருஷ்ணகோனாரது பாலென்று நிச்சயித்துக்கொள்வேன். மோரைக் காட்டிலும் லேசாகத் தயிர் இருக்குமாயின் அது கிருஷ்ணகோனாரது தயிர் என்பதில் எனக்குச் சந்தேக மிருப்பதில்லை. உன் பாலுந் தயிரும் எனக்குத் தெரியாமலும் இருக்குமா?

வாதி:—என் பாலுந் தயிருந் தங்கட்குத் தெரியுமல்லவா?

ஞான:—ஆம்.

வக்:—சரி, வாதியைத் தங்கட்குத் தெரியுமென இதிலிருந்து விளங்குகிறது. தங்கட்கும் வாதிக்கும் என்ன சம்பந்தம்?

ஞான:—பேஷ், வெகு சமர்த்தர்! இவ்வளவு சாமர்த்தியமும் புத்தி சூட்சுமமும் இல்லாமல் யார் வக்கீலாக இருக்கமுடியும்?

வக்:—என்ன சாமர்த்தியம் கண்டுபிடித்தீர்?

ஞான:—ஒரு பிராம்மணனுக்கும் இடையனுக்கும் சம்பந்தம் கற்பிக்க விரும்புகிறீரே.

வக்:—வீண் வார்த்தைகள் வேண்டாம். இந்த வழக்கில் உமக்கென்ன தெரியும்?

ஞான:—இவ் வழக்கில் நீர் வக்கீலென்றும், கிருஷ்ணகோனார் வாதியென்றும், நான் சாட்சியென்றும் அறிவேன்.

வக்:—அதல்ல, பசுவின் திருட்டைப்பற்றி உனக்கென்ன தெரியும்.

ஞான:—பசுவின் திருட்டைப்பற்றி என் தந்தையார் எனக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. என் தந்தையார்க்கோ பாட்டனார்க்கோ இது விஷயம் தெரியாது. எனக்கோ பாலும் தயிரும் நிரம்ப வேண்டி யிருக்கிறது. தயவு செய்து பசுத் திருட்டைப்பற்றிக் கற்றுக் கொடுப்பீராயின் பலகோடி வந்தனம் புரிவேன்.

வக்:—ஓ! பசு திருடு போனதை நீ பார்த்தாயா?

ஞான:—ஒரு சமயத்தில் கோபால கோனாரது பசு திருடு போனபோது............

வக்:—என்ன தொந்தரவாக இருக்கிறதே. கிருஷ்ண கோனாரது பசு களவாடப்பட்டபோது நீ பார்த்தாயா?

ஞான:—என்னை அழைத்துப் பக்கத்தில் சாட்சியாக வைத்துக்கொண்டிருக்க அந்த ஏழைத் திருடன் என்ன அவ்வளவு புத்தியற்ற மூடனோ? அப்படி யிருந்தால் உனக்கும் எனக்கும் வேலை நிம்மதி தான்.

நீதிபதி குறுக்கிட்டு 'அந்த வீண் பேச்சை நிறுத்திக்கொள்.' (கோர்ட்டு வெளியில் கட்டியுள்ள பசுவைக் காட்டி) 'அதோ பார். அந்தப் பசு உனக்குத் தெரியுமா?' என்றார்.

ஞானசாகரர் இரு கரங் கூப்பி 'துரையவர்களே! எந்தப் பசுவைச் சொல்லுகிறீர்கள்' என்றார்.

நீதி:—என் எந்தப் பசுவென்று கேட்கிறாய்? இங்கு எத்தனை பசுக்கள் இருக்கின்றன?

ஞான:—தாங்கள் ஒரு பசு பார்க்கிறீர்கள். ஆனுல் நான் இங்குப் பல பசுக்களைப் பார்க்கிறேன்.

நீதி:—(வெறுப்புடன்) நீ அந்தக் கருப்புப் பசுவைப் பார்க்கவில்லையா?

ஞான:—(வெளியில் கட்டியுள்ள கருப்புப் பசுவைப் பார்க்காமல் கருப்புச் சட்டை தரித்துள்ள வக்கீலைப் பார்த்து) இந்தக் கருப்புப் பசுவா திருடிவிட்டது?

இதைக் கேட்டு நீதிபதி பொறுக்க முடியாமல் 'நீ கோர்ட்டு வேலைகளைக் கெடுத்ததுமன்றிக் கோர்ட்டை அவமானமும் செய்தாய். அதற்காக உனக்குப் பத்து ரூபாய் அபராதம் விதித்திருக்கிறேன்' என்று சொன்னுர்.

ஞான:—(பூமியில் விழுந்து பணிந்தெழுந்து கைகூப்பி நின்று) துரையாரே! தாங்கள் தயைசெய்து அந்த அபராதத்தை வசூலிக்க வேண்டியவர் யாரெனச் சொல்லுங்கள்.

நீதி:—ஏன் கேட்கிறுய்?

ஞான:—அபராதத்தை எப்படி வசூலிக்க வேண்டுமென நான் அவரிடம் அறிவிக்கவேண்டும்.

நீதி:—நீ அறிவிக்க வேண்டியதில்லை. அவர்கட்குத் தெரியும்.

ஞான:—துரையே மன்னிக்கவும். என்னிடத்தில் ஒரு பைசாவும் இல்லாமையால் இந்த உலகத்தில் எவரும் என்னிடமிருந்து அபராதம் வசூலிக்க முடியாது. ஆகையால் என்னைத் தொடர்ந்து மறு உலகத்திற்கு வர அவர் தயாராக இருக்கிறுரா என்று நான் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படி அவர் என்னைத் தொடர்ந்து வந்தால் அடுத்த ஜன்மத்தில் சௌகரியமா யிருந்தால் அவரிடம் அபராதத்தைச் செலுத்திவிட நான் தயாராக இருக்கிறேன்.

நீதி:—நீ அபராதஞ் செலுத்தாவிட்டால் சிறைவாசம் அனுபவிக்கவேண்டும்.

ஞான:—எவ்வளவு நாட்களுக்கு?

நீதி:—ஒரு மாதத்திற்கு.

ஞான:—தயவு செய்து இன்னும் இரண்டு மாதம் அதிகமாக விதிக்கக் கூடுமோ?

நீதி:—ஏன் அதிகமாக விரும்புகிறுய்?

ஞான:—காலம் மிகக் கஷ்டமானதாக இருக்கிறது. எங்கும் பணக் கஷ்டம் மிகுந்துவிட்டது. ஆகையால் சந்தர்ப்பனை வரவரக் குறைந்துவிட்டது. அல்லாமலும் இப்போது பார்ப்பான் என்றால் அநேகர் வயிறெரிகிறுர்கள். பார்ப்பானுக்குச் செய்துவந்த சந்தர்ப்பனைகளை யெல்லாம் இப்போது ஏழைகள் பார்ப்பன ரல்லாதவர்களா யிருந்தாலும் அவர்களுக்கே செய்யவேண்டு மென்றும் பார்ப்பனர்கட்குச் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் சிலர் பலத்த பிரசாரஞ் செய்து வருகின்றனர். பார்ப்பனர் மீதிருந்த வெறுப்பு கோயிலையும் சாமியாரையும் பற்றிவிட்டது. சாமியாருக்கே சாப்பாட்டைக் குறைத்து வருகின்றபோது பார்ப்பன சந்தர்ப்பனை எப்படி கிடைக்கும்? இன்னும் சில நாட்களில் பார்ப்பானுக்கு ஒரு காசும் போகவொட்டாமல் பல பாதுகாப்புகளைச் செய்வார்கள்போல் தோன்றுகிறது. ஆகையால் தாங்கள் இன்னுஞ் சில மாதங்கட்குச் சிறைவாசம் தந்து விருந்தளித்தால் இந்த ஏழைப் பார்ப்பான் தங்களை வாயார வாழ்த்துவான். சில மாதங்களாவது நான் கஷ்டமின்றிச் சௌக்கியமாக இருக்கக்கூடும்.

நீதி:—(இந்தப் பார்ப்பானுக்கு அபராதமோ சிறைவாசமோ விதிப்பதால் பயனில்லை என எண்ணிக்கொண்டு) "நீ மறுபடியும் தொந்தரவு கொடுக்காமல் கேட்பதற்கு மட்டும் பதில் சொன்னுல் உன் அபராதத்தை மன்னிப்பேன். இந்தப் பசு உனக்குத் தெரியுமா சொல்.

ஞான:—இரண்டு கொம்புள்ள அந்தப் பசுவா? அது எனக்குத் தெரியும்.

நீதி:—அது யாருடையது?

ஞான:—அது என்னுடையது.

வழக்கு கெட்டுவிடும்போல் வக்கீலுக்குத் தோன்றியது. கிருஷ்ணகோனுரது முகம் வெளுத்தது. அவர் ஞானசாகரரைப் பார்த்துத் 'திருட்டுப் பயலே பசு உன்னுடையதா?' என்று கோபமாய்க் கேட்டார்.

ஞான:—என்னுடைய தல்லாமல் வேறு யாருடையது? அதன் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலிய யாவும் நானே அனுபவிக்கிறேன்; அது என்னுடைய தல்லவா? நீ சும்மா பாதுகாத்து வருவதாலேயே உன்னுடையதாகுமா?

கிருஷ்ணகோனுர் கைகூப்பி நமஸ்கரித்து 'அன்பரே உண்மையாகச் சொல்லும். அந்தக் கருப்புப் பசு யாருடையது?' என்றுர்.

ஞான:—அதன் பால் முதலியவற்றை யார் அனுபவிக்கிறுர்களோ அவர்களுடையது தான். அனுபவியாத லோபிகளுக்கு அது எப்படிச் சொந்தமாகும்?

கிருஷ்:—அது என்னுடைய தல்லவா?

ஞான:—ஒருக்காலும் உன்னுடையதாகாது. நீ ஒரு துளி பாலும் சாப்பிடுவதில்லை. எல்லாவற்றையும் அடியோடு விற்றுவிடுகிறுய். அப்படியிருக்க அது எப்படி உனக்குச் சொந்தமாகும். கோனுரே! அந்த எண்ணத்தை விட்டுவிடு. திருடனுக்கே பசுவைக் கொடுத்துவிடு. அவனுவது திருப்தியாகப் பாலைச் சாப்பிட்டுச் சௌக்கியப்படட்டும்.

இவ்வாறு இருவரும் சந்தையைப்போல் இரைந்து கொண்டிருப்பதைப் பார்த்து நீதிபதி இருவரையும் அடக்கிச் சாகரரைப் பார்த்து, 'கோனுர் அதன் பாலை விற்கிறுரல்லவா?' என்று கேட்டார்.

ஞான:—ஆம்.



# ஜீ வ கா ரு ண் ய ம்

திரு. S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார், தேவகோட்டை

சிவதருநாதன்:—ஐயா, வாருங்கள் வாருங்கள். தங்களைப் பார்த்து வெகு நாட்களாயின. சௌக்கியந்தானே?

சுடலைமுத்து:—ஆமாம், சௌக்கியந்தான். நமது குடும்பத்தில் யாவரும் க்ஷேமந்தானே? நாமிருவரும் சந்தித்து நெடுநாட்களாயின. கும்பிடப் போன தெய்வங் குறுக்கே வந்தாற்போல் இன்று தங்கள் தரிசனங் கிடைத்தது. நானுந் தங்களைத் தேடித்தான் செல்கின்றேன்.

சிவ:—அப்படியா? என்ன விசேடம்?

சுட:—தங்களுக்குத் தெரியாதா? நமது ஊரிலுள்ள மாரியம்மன் கோயில் பொங்கலுக்காகக் காப்புக் கட்டி இருக்கிறது. இவ்வருடம் எவ்வருடத்திலும் சிறப்பாக நடக்கும். குடும்பத்துடன் வரும்படி தங்களை அழைக்கத்தான் வந்தேன்.

சிவ:—ஆஹா, மிகச் சிறப்பாக நடைபெறுமா? ஆனுல் இவ்வருடம் அதிக விமரிசையான காரியங்கள் என்ன? தேவார கோஷ்டிக்காரர் யார்? வேறு விசேட காரியம் யாது?

சுட:—அப்பப்பா! நல்ல காரியங் கூறினீர்கள். தேவார கோஷ்டியுந் தாவார கோஷ்டியும் பிடிப்பவருக்குப் பிடிக்கட்டும். நமக்கு ஒரு கோஷ்டியும் வேண்டாம். அந்தப் பாதகரின் வார்த்தையை உச்சரிக்க என் மனம் இடந்தாராது.

சிவ:—ஏனையா மனம் வருந்துகின்றீர்கள்?

சுட:—ஐயா, தாவடந் தொங்க, நோயுள்ள மாட்டிற்குச் சூடு போட்டாற்போல் பட்டை பட்டையாய் விபூதியை இட்டுக்கொண்டு, கையில் தாளமேந்தி, ஆ வென்று வாயைத் திறந்து பித்தா பேயா சுடலை யாண்டி கோவணத்தாண்டி நானுன்னை நம்பினேன் நீ யென்னை யாண்டிடு என்று வாயில் வந்ததைப் பிதற்றி நம்மை ஏமாற்றிக் காசு பறிப்பவர் பாதகரல்லவா? அவர்களுக்கேன் வீணுகக் காசைக் கொடுத்துக் கவலைப்படவேண்டும்?

சிவ:—சரி, சரி, நிரம்ப நல்லது. இருக்கட்டும், விமரிசையாய் நடைபெறுவது வேறு யாது?

சுட:—எவ்வருடமும் வீட்டுக்கு ஒரு ஆடுதான் வெட்டுவது வழக்கம். இவ்வருடமோ பரம ஏழைகளுங்கூட இரண்டு ஆடும் ஒரு சேவலும் தவராது அவ்வம்பிகை மனங்குளிர வெட்டுவதுடன் ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு பானை பொங்க லிடுவதாகவும் பிரார்த்தனை செய்துகொண் டிருக்கிறுர்கள். ஆதலால் இவ்வருடம் கூட்டம் மிக அதிகமாக இருக்கும். இதுவரையும் வராத பெரிய மனிதர்களையெல்லாம் இவ்வருடம் பார்க்கலாம். ஆதலால் தாங்கள் அவசியம் குடும்பத்துடன் வந்திருந்து எங்கள் விழாவைக் கண்டு மகிழவேண்டுகிறேன்.

சிவ:—ஐயா, இந்தக் காட்சியைக் காணுத கண்ணென்ன கண்? இவ்வரிய சந்தர்ப்பம் என்று

[110-வது பக்கத் தொடர்ச்சி]

நீதி:—இந்தப் பசு கோனுருடைய கொட்டையில் நிற்கிறதுண்டா?

ஞான:—நிற்பதுண்டு. அதோடு நானும் சில சமயம் நிற்பேன்.

நீதி:—அதனை அவர் தானே போஷித்து வருகிறுர்?

ஞான:—ஆம், அதனையும் என்னையும் போஷித்து வருகிறுர்?

இச்சமயத்தில் வாதி வக்கீல் மிக வேகமாய் எழுந்து, 'பிரபுவே! என் கட்சி நிரூபிக்கப்பட்டாய் விட்டது, சாட்சி வாக்கு மூலத்தால் பசு கோனுருடையதெனத் தெரிந்துவிட்டது. இதற்குமேல் சாட்சியை விசாரிக்க நான் விரும்பவில்லை என்று கூறி யமர்ந்தார்.

எதிரி வக்கீல் குறுக்கு விசாரணை செய்ய விரும்பாமையால் நீதிபதி ஞானசாகரரைப் போகும்படி அறிவித்தார். விட்டது போதுமென சாகரர் இறங்கி ஓடி ஒரு வெளியில் உட்கார்ந்தார். நானும் மறைவிலிருந்து வெளிப்பட்டு அங்கு ஓடினேன். ஏராளமான கூட்டம் அவரைச் சூழ்ந்துகொண்டிருந்தது. கோனுரும் அங்கிருந்தார். கோனுர் அவரைத் திட்டிக் கொண்டிருந்தார். ஞானசாகரரும் 'நீ அந்தப் பசுவைத் திருடனுக்குக் கொடுக்காவிட்டால் உன்னைப் பாபம் விடாது ஜாக்கிரதை' என்று எதிர்சாபம் கொடுத்துக்கொண்டிருந்தார்.

'ஏன் அதைக் கொடுத்துவிடச் சொல்கிறீர்?' என நான் கேட்டேன்.

என்னைப் பார்த்ததும் மிக மகிழ்ச்சியுடன் 'ஏன், உனக்குத் தெரியாதா? ஒருவனுக்குச் சொந்தமான ஒரு பூமி வேறொருவன் அனுபவத்தில் பல ஆண்டுகள் இருக்குமானுல் அந்த நிலம் அனுபவ பாத்தியத்தால் அவனுக்குச் சொந்தமாய்விடுகின்ற தல்லவா? அந்தச் சட்டத்தின்படி இந்தப் பசுவின் பாலை ஒரு சிறிதும் அனுபவியாத இக்கோனுருக்கு அது எப்படிச் சொந்தமாகும்?' என்று கூறிவிட்டுக் 'கோனுரே; சட்டத்தின்படி நடந்துகொள்ளும், அதுதான் தர்மமும் நீதியுமாகும்' என்று கூறிவிட்டு எழுந்து போய்விட்டார். நானும் ஆச்சரியத்துடன் வீடு நோக்கிச் சென்றேன்.

கிடைக்கும் ? நல்லது, நல்லது. இவ்வித போதியுள்ள மக்களைப் போற்றுத ஈர என்ன ஈா ? 'குலத்தைக்கெடுக்க வந்த கோடலிக்காம்பு' என்னும் ஆன்றோர் வாக்கின்படி நமது குலத்தை அடியோடு கெடுக்க அநேக ஆசாமிகள் முன் வந்திருக்கின்றார்கள். என்ன பரிதாபம்! நமக்குள்ள திருநாமங்களை வெளியிட மனம் நாணுகின்றது. ஆஹா! நமக்கு இவ்வித அரும்பெருந் திருநாமங்கள் அமைந்துள்ளனவே யொழிய அவற்றிற்கேற்ற நடவடிக்கைகள் நம்மிட மில்லாமையாற்றானே அன்னியர் நம்மைப் பழிக்கின்றார்கள் ?

சூட:—ஏனையா தங்கள் மனந் துன்புறுகின்றது? நமக்கு என்ன அருமையான திருநாமங்கள் கிடைத்திருக்கின்றன? என்ன நடவடிக்கைகள் சரிவர இல்லை? மீன் பிடிக்கத் தெரியாதா? கயிறு நூற்கத் தெரியாதா? வலை யுண்டு பண்ணத் தெரியாதா? தூண்டில் போடத் தெரியாதா? மீன் தூரிகள் செய்யத் தெரியாதா? என்ன விஷயங்களில் சரிவர நடக்கவில்லை? அதை யெனக்கு விபரமாகக் கூறுங்கள் தங்களுத்தரவின்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்.

சீவ:—(ஆஹா முருகா, இதென்ன விபரீதம்! இவ்வித கொடிய சிந்தனையுள்ளவரோடு நாம் சிநேகித்ததே பெரும்பாவ மல்லவா? இவருடன் சிநேகித்தால் நமக்கும் இவருடைய துர்ப்பழக்கமே வந்துவிடுமாதலால் இத்துடன் இவர் சிநேகத்தை அறவே நீக்கவேண்டும் எனவெண்ணி) ஐயா, இதுவரை யுமக்கும் நமக்கு மிருந்த சிநேகம் போதும்; இத்துடன் நிறுத்திக்கொள்ளும். நான் சென்று வருகிறேன்.

சூட:— என்ன இவ்வளவு வருத்தம்? நான் இதுவரை தங்கள் வார்த்தையில் எதை மீறி நடந்தேன் ? எதற்காக நம் சிநேகத்தை இத்துடன் நிறுத்த வேண்டுமென்று சொன்னீர்கள்? எப்போதும் தங்களுத்தரவின்படி கீழ்ப்படிபவ னென்பதை நிச்சயமாக நம்புங்கள்.

சீவ:—ஏதையா, நீங்களாவது நமது வார்த்தையை அங்கீகரிப்பதாவது. உமக்கும் நமக்கும் ஒருகாலும் ஒவ்வாது. வீண் விவாதம் எதற்கு?

சூட:—அப்படித் தாங்கள் நினைக்கவே வேண்டாம். தங்கள் திருவாக்கைச் சிரமேற் கொண்டு நடக்கக் கடமைப்பட்டுள்ளேன். இது உண்மை, உண்மை. இனி நான் நடக்க வேண்டிய விதங்களை நன்கு விளக்கிக் கூறுவதோடு நமது வரலாற்றையும் சுருக்கமாய்க் கூறுங்கள்.

சீவ:—(சரி சரி, இனி இவரை யெவ்விதத்திலுந் திருத்திவிடலாம். இவர் நமது கைவசமானால் இவருடைய ஊரிலே திருக்கோயில் முன்பு பலியிடுவதையும் அடியோடு நிறுத்திவிடலாம். இவருடைய ஊரிலுள்ளோ ரெல்லாம் இவர் சொற்படி நடப்பதால் அநேகரைச் சைவராக்கிவிடலாம். இவ்வூரில் பலி நின்றுவிட்டால் நம் செங்குந்தர் வதியும் மற்ற ஊர்களிலும் பலியிடுதல் நின்றுவிடும். இதுவே நல்ல தருணம், என நினைத்து) ஐயா, நான் சொல்வதுபோல் நடப்பதாகத் தாங்கள் வாக்களித்துள்ளீர்கள்.

"மாசற்றவர் சொல்வழுவற்றவர் மரியாதை யுள் [ளோர்
நேசத்துறு புன்னுடன் றண்டிகை நீட்டப்பெற் [றோர்
பாசத்தொடே சுந்தரர்க்கு முன் கைலைசெல்பண்ப [ரெந்தத்
தேசத்தவருக்கு நல்லவர்வல்லவர் செங்குந்தரே"

என்ற முத்துக்குமார தேசிகர் திருவாக்கின்படி நம் குலத்தவர் சொன்ன சொல் பிசகாதவரே. ஆதலால் என்னுள்ளத்தி லுள்ளதை யுமக்குக் கூறுகிறேன்; ஆனால் நீர் என் வார்த்தையின்படி நடப்பீரோ என்னவோ என்ற சந்தேகம் இருக்கிறது.

சூட:—ஏதையா, நான் உண்மை யென்று சொல்லியுந் தங்களுக்குச் சந்தேக மிருப்பானேன்? தங்களுடைய திருவாக்கின்படி நடக்கின்றேன். இது முக்காலும் உண்மை, உண்மை. சத்தியமாக நம்புங்கள்.

சீவ:—சரி சரி, நல்லது. நான் சொல்வதைச் சற்றுக் கவனமாகக் கேளுங்கள். தாங்கள் எவ்விதத்திலும் வாக்குச் சுத்தமுள்ளவர்களென்பது எனக்குத் தெரியும். ஆதலாற்றான் தங்களைச் சிநேகித்தேன்.

சூட:—ஐயா, மற்ற விஷயங்களைப் பின்னால் பார்த்துக்கொள்ளுவோம். எனக்குள்ள பணியை இன்னதெனத் தெரிவித்தால் அவ்விதம் அநுசிக்கிரம் செய்கின்றேன்.

சீவ:—தங்கள் ஊரில் மாரியம்மன் கோயில் உற்சவமென்றும், அதற்கு வீட்டிற்கு இரண்டு ஆடுகளும் ஒரு சேவலும் தவராது பலி யிடுவதென்றும் சொன்னீர்களே அதென்ன விபரீதம்? நமது குலமென்ன? அதை யோசியாது ஊரிலுள்ளாருடன் தாங்களுங் கூடிக்கொண்டு இத்தீய வழியிற் பிரவேசிக்கலாமா? நீங்கள் தானே உங்களூரில் விவேகமுள்ளவர்? ஆனால் உங்களுக்கு எடுத்துரைப்பா ரில்லாமையாலல்லவா தாங்களும் அவர்களுடன் சென்று இத்தகைய காரியங்களையும் நடத்தி வருகிறீர்கள்? நமது வரலாற்றைச் சுருக்கமாய்க் கூறுகின்றேன் கேளும்.

முதன் முதலாக நமது திருநாமங்களைப் பாருங்கள். திருக்கைலாய பரம்பரையர், உபசப் பிரமணியர், செங்குந்தர், கைக்கோளர், வீரசைவர், உத்தர சைவர், சத்தியின் புத்திரர், சிவகுமாரானுஜர்கள், வீரவாகு கோத்திரத்தர், முதலியார் முதலிய அநேக சிறப்புப் பெயருடையவரல்லவா நாம்?

"ஆராருமை மூலைப்பாலுண்டவாய ரறுமுகன்பாற்
பேராநற்றம் பியராகி வந்தோ ரிந்தப் பேருலகில்
தாராரும் வெற்றிக் கடம்பணிவோர் செந்தமிழ் [புனைவோர்
சீராரும் உத்தரசைவரு மாவரிச் செங்குந்தரே.



தவசவதம்புகழ் சத்திய மானர் தயவிதெல்லாம்
கவசமெனத் தினம் பூண்டுகொண்டே யெந்தக் [காலத்திலும்
எவர்சமயப் பற்றையு மணுகாரென்று மீறிலதாம்
சிவசமயப்பரி பாலனராகு மிச்செங்குந்தரே."

எனக் கலித்துறை மாலை நம்மைப் புகழ்கின்றது.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த நம் ஜாதியாரெல்லாந் தங்கள் தங்கள் செய்கையாற்றானே தாழ்ந்த நிலைமை யடைந்துள்ளனர்? இனியாவது இத்தீச் செயலாகிய கொலைத் தொழிலை அறவே நீக்கிக் கொல்லாமை விரதத்தைக் கைக்கொண்டாலல்லவோ நாம் நன்கு முன்னேற்றம் அடையலாம்?

ஐயா, கருணைக் கடல்களான மநுநீதி கண்ட சோழன், சிபிச் சக்கரவர்த்தி, பாரிவள்ளல் முதலிய பல மன்னர்கள் ஆட்சி செலுத்திய நமது நாட்டின் கண்ணே பிறந்த மக்களிற் சிலர் துர்க்கை, மாகாளர், காளி, கருப்பன், கொண்டி, இருளன், மாடன், சப்பாணி, காட்டேரி, மாரி என்னும் அநாகரீகமான பெயர்களை வைத்துக்கொண்டு சுவாமிகளெனக் கொண்டாடி அவைகளுக்குப் பொங்கல் முதலிய விழாக்களை ஆரம்பித்து அந்தச் சுவாமிகள் கேட்பதாகச் சொல்லி ஆடு கோழிகளைக் கும்பல் கும்பலாகக் கொண்டு வந்து, பூசாரி தண்ணீர் தெளித்து, புதுமாப்பிளை போலப் புஷ்பங்களால் அலங்கரித்துச் சிறிதும் இரக்கமின்றிக் கைகூசாது பெரிய வாளால் வெட்டுவதும், அவைகள் உடலாடக் காலாட உள்ளந் துடிக்க கண்ணீர் பெருகக் கதறுவதும், 'அம்மா, அபயம்அபயம்' என்று அலறுவதும், இரத்த வெள்ளம் பீறிட்டுப் பெருக்கெடுத்து ஆறாக ஓடுவதும் என்ன கொடுமை? இது எத்துணைப் பாபம்?

வீடு வாசல் பணம் காசு நிலம் புலம் பெண்டு பிள்ளை மழை தண்ணீர் யாவற்றையும் தரவேண்டுமென்று நம்மால் வணங்கப்படுகிற சாமியா நம்மிடம் வந்து ஆடு கோழிகளை அலற அலற அறுத்துப் போடுங்கள் என்று சொல்லும்? அப்படிக் கேட்கின்ற சாமி, தானாக ஆடு கோழிகளை அழைத்து உண்ண முடியாதா? "அம்மா பழைய சாதம் போடுங்கள், பசியாதிருக்க வரந்தருகிறேன்" என்னும் கதைபோலத் தன் பசியை நீக்கிக்கொள்ள முடியாத சுவாமி நமக்கு என்ன பயனளிக்கும்? நன்கு ஆழ்ந்து கவனியுங்கள். ஆனால் நான் சுவாமியை நிந்திக்க வில்லை. நமது அறியாமையைக் கூறுகின்றேன். உண்மையில் ஸ்வாமிக்கு எதுவும் வேண்டியதுமில்லை; சுவாமி யாரிடத்திலும் வந்து கேட்பதுமில்லை சுவாமிக்கென்று வெட்டுகிற ஆடு கோழிகளை மயிர் நீக்கி, மலம் நீக்கி, எலும்பு நீக்கி, மற்றவையில் ஒரு சிறிதும் வெளியிடாமல் நன்றாய் மென்று தின்று மாந்தர் களிப்படைகின்றனர். சுவாமிக்கு இதில் வருமானமென்ன? இவ்விதம் பலியிடும் அன்பர்களுக்கு எவ்வளவு பொருள் நஷ்டம்? இத்துடனா போகின்றது? ஆசைக்கோ ரளவில்லையென்றபடி மாமிசத்தை வயிறு நிறைய உண்டு களிப்பதால் மறுதினமே வயிற்றுப்பொருமல், அஜீரணம், மாந்தம் உண்டாகிறது. சிலருக்கு மாந்த ஜன்னியும் உண்டாகும். உடனே வைத்தியர் வருவார். வந்ததும் நாடியைப் பரீக்ஷித்து "ஆஹா என்னமோசம்? திடீரென இப்படி வந்துவிட்டதே, வியாதி அணைகடந்த வெள்ளமாகி விட்டதே. இனி கடவுள் கருணையாற்றான் சௌக்கியமாக வேண்டும்; ஆனால் நல்ல மருந்தாகத்தான் கொடுக்க வேண்டும். மருந்து செலவு மட்டிலும் 50 ரூபா ஆகும்" எனக்கூறுவர். உடனே பிரபுவாயிருந்தால் கொடுப்பர். மற்றோர் எதையாவது விற்று அவசியங் கொடுத்தே தீருவர். நன்மையான காரியத்துக்கு ஒரு பைசாகூட கொடுக்க மாட்டார்கள். என்ன விபரீதம்! பழி விடுமா ?

'அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர் செகுத்துண்ணாமை நன்று'

என்றார் பெரியார். ஆதலால் தாங்கள் செய்ய வேண்டியது தங்களூர் மாரியம்மன் கோயில் பொங்கலில் அவசியம் பலியிடுதலை நிறுத்துவதேயாகும். இதுதான் தங்கள் மேலான பணி.

சூட:—கருணை யுருவான பெரியீர்! தங்கள் உபதேசங்கள் முற்றிலு முண்மை. இனி நான் ஆயுள் வரை பலியிடவே மாட்டேன். ஆனால் ஊரைத் தடுத்தல் கடுமையான காரியம். ஆயினும் தாங்களொன்று செய்தீர்களானால் அவசியம் நின்று போகும். அப்படி அதிலும் நிற்காவிட்டால் நானே கண்டிப்பாய்ப் பலியிடாது நிறுத்திவிடச் செய்கிறேன்.

சீவ:—நான் என்ன செய்ய வேண்டும்?

சூட:—வேறு ஒன்றுமில்லை; எனக்குச் சொன்னதுபோல, ஊராருக்கெல்லாம் தெரியும்படி இன்று முதல் பிரசங்கம் ஆரம்பித்தால் அவசியம் நின்று போகும்.

சீவ:—அப்படியே செய்வோம்.

சூட:—சரி வாருங்கள், இன்று இரவு முதல் எட்டு நாட்களும் இடைவிடாது பிரசங்கம் செய்து எப்படியாவது வாயில்லாப் பிராணிகளைக் காத்து ஜீவகாருண்யத்தை நிலை நாட்டுவோம்.

பிள்ளையைப் பேணுதல் பெற்றோர் கடனல்லவா ?
செங்குந்த மித்திரனை ஆதரித்தல் செங்குந்தர் கடனல்லவா ?




# இந்திய உணவு

[டாக்டர் குருசாமி முதலியார் சொற்பொழிவு]

உடல் நலம் பேணுதற்கு முதற்படியாக உள்ளது நேர்மையான உணவு. நேர்மையான உணவு எது என நாம் முதலில் நிர்ணயிக்க வேண்டும். இதற்கு நமது சூழல் எத்தகையது என்று நாம் எப்போதும் தெரிந்துகொள்ளவேண்டும். அன்றியும் நாம் உட்கொள்ளும் உணவின் சக்தி இன்னதென்றும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். பல உணவுப் பொருள்களையும் சோதித்துப் பார்த்ததில், பாலும் கீரையும் சிறந்த உணவுகளாகத் தோன்றுகின்றன. இதர உணவுப் பொருள்களின் குணபேதங்களைச் சமனுக்கும் திறன் இவைகளுக்கு வாய்ந்திருக்கின்றது. இவ்விரண்டையும் தவிர வேறெந்த உணவுப்பொருளுக்கும் இந்தக் குணங்கள் கிடையா. ஆனால் ஒரு விஷயம்பற்றி மட்டும் நாம் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். கிருமிகள் செழிப்பதற்குப் பால் தக்க சாதனமாகும். பால் கலப்பற்றதென்றும், அந்தப் பாலை யளிக்கும் பசு நன்றாக உணவு கொண்டு நோயின்றியுள்ளதென்றும் தெளிவாய்த் தெரிந்தே அதைக் கொள்ளவேண்டும்; இல்லையேல் பாலே பல வகை நோய்களுக்குக் காரணமாக நிற்கும்; விஷசுரம், வாந்திபேதி, குடல் நோய்கள் முதலியன தோன்றுவதற்கு ஆதாரமாக விருக்கும். சாக்கடையிலுள்ள கிருமிகளைவிட அதிகமான கிருமிகள் பாலில் இருக்கின்றனவென ஒரு மருத்துவ நிபுணர் கூறுகிறார். ஆகவே இந்த ஆபத்தைக் கடக்க வேண்டிப் பாலைத் தோய்த்துத் தயிராக்கி அதை யுண்ணலாம். பாலிலுள்ள குணங்களனைத்தும் தயிருக்குண்டு. ருஷ்ய மருத்துவ நிபுணரான மெக்னிகாப் என்பார் இந்தியர்களின் உணவுபற்றிக் கூறும்போது "இந்தியாவில் இள மணங்கள் நடைபெற்றும், சீதோஷ்ண நிலை பாதகமாயிருந்தும், வறுமை ஓங்கியிருந்தும், மக்கள் நெடுநாள் வரை உயிருடன் இருப்பதற்குக் காரணம் அவர்கள் தம் உணவுடன் மோர் சேர்த்துண்பதே யாகும்" எனக் கூறி யிருக்கின்றார். வயிற்றில் அழுகக் கூடிய பொருள்களை மோர் நாசஞ் செய்கிறது. இதனாலேயே இந்தியர்கள் நெடுநாள் வாழ்கின்றனர். இந்தப் பாடம் அவர்களுக்கு ஹடயோகிகளால் கற்பிக்கப்பட்டது. இவர்கள், வயிற்றை வெகு சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுவார்கள்.

பாலுக்கு அடுத்தபடியாகச் செடிகளின் கீரைகள் ஏற்ற உணவுப் பொருளாம். கீரைகள் பரம ஏழைகளுக்கும் கிடைக்கத்தக்கன. கீரையில் முதல்தர உணவுச் சத்திருக்கின்றது. இது உடல் வளர்ச்சிக்குக் காரணமாயிருப்பது மட்டுமன்றி நோய் சாரா வண்ணம் தடுக்கவும் வல்லது. கீரை எவ்வளவிற் கெவ்வளவு மேன்மையா யிருக்கிறதோ அவ்வளவிற் கவ்வளவு அதில் உணவுச் சத்து மிகுந்திருக்கின்றது.

சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரை அங்குள்ள மக்கள் உண்ணும் உணவில் கார்போ ஹைட்ரேட் வெகுவா யிருக்கின்றது. ஆனால் மாச்சத்து சிறிது குறைவா யிருக்கின்றது. சில உணவுகளில் தாதுவைக் காப்பாற்றுதற்கான சத்துக்கள் கிடையவே கிடையா. எனவே இம்மாகாணத்தில், குறிப்பாக வடஜில்லாக்களில், உடல்வீக்க நோய் வெகுவாகக் காணப்படுகிறது. அன்றியும் முதல் தர உணவுச் சத்துக் குறைவாயுள்ள உணவு உண்ணுகிறவர்கள் பற்களில் இலகுவில் நோய் ஏற்படுகிறது. கீழ் நாடுகளிலுள்ளோர் பற்கள் மிகச் சிறந்தனவெனும் புகழ்பெற்றவை. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உறைவோர் மிக மோசமான பற்களுடையவர்கள். இதற்குக் காரணம் போலி நாகரிகமெனக் கூறுகின்றனர். போலி நாகரிகப் பெருக்கமே இதற்குக் காரணமெனத் தோற்றுகிறது.

இந்திய உணவுப் பொருள்களனைத்திலும் கோதுமையிலேதான் மிகச் சிறந்த உணவுச் சத்திருக்கின்றது. ஆனால் கோதுமை உணவுண்ணுவோருக்கு நீரடைப்பு நோய் வெகுவாய்க் காணுகிறது. அரிசி யுணவருந்துவோர்க்கு இந்நோய் வருவதில்லை. தென்னிந்தியாவில் அரிசி தீட்டும் முறை கெடுதலானது. எவ்வளவிற் கெவ்வளவு அரிசி வெகுவாகத் தீட்டப்படுகிறதோ அவ்வளவிற்கவ்வளவு அதன் உணவுச் சத்துக் குறைந்துபோகிறது. அரிசியைத் தீட்டும்போது அதன் தவிட்டிலுள்ள உணவுச் சத்துக்களெல்லாம் சேதிக்கப்படுகின்றன. அன்றியும் சாதம் வெந்த பிறகு அதினின்று கஞ்சியை வடித்துவிடுவதனால், அரிசியில் எஞ்சியிருக்கும் உணவுச் சத்தும் அதினின்றும் நீங்கிவிடுகிறது. பட்டாணியிலும் மொச்சையிலும் மாச்சத்து வெகுவாயிருக்கின்றது. ஆனால் அவை சீக்கிரமாகச் சீரணமாவதில்லை. மொச்சையை உட்கொண்டவுடனே குடலில் அதைப் பொங்கச் செய்யத்தக்க சத்து அதில் வாய்ந்திருக்கின்றது. பாலூட்டும் தாய்களுக்குப் பருத்திவிதை சிறந்த உணவெனக் கருதப்பட்டது. ஏனெனில் இதில் தாய்க்குப் பாலைப்பெருக்கத்தக்க சத்தொன்றுண்டு ஆயினும், அதில் ஒரு விஷச்சத்து மிருக்கின்றது.

உருளைக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு முதலிய கிழங்கு வகைகளில் மூன்றாந்தர உணவுச் சத்திருக்கின்றது. எனவே, இவை சொறி, கரப்பான் வாராது தடுக்கத்தக்கன. மூன்றாந்தர உணவுச் சத்து புதுப்பழங்களிலும் காய்கறிகளிலு மிருக்கின்றது. மஞ்சள் நிறமுள்ள எல்லாப் பழங்களிலும் இச்சத்திருக்கின்றது. பழங்கள் மலத்தைக் கழிக்கச் செய்யும் இயல்புடையன. எனவே இதர உணவிலுள்ள குறைபாடுகளைத் திருத்தும் இயல்பு பழங்களுக் குண்டு. ஆரஞ்சு பழத்திலும் முதல்தர உணவுச் சத்திருக்கின்றது. மாம்பழத்தில் இரண்டாந்தர உணவுச் சத்து மிகுதியா யிருந்தாலும், மூன்றாந்தரச் சத்து மிகக் குறைவா யிருக்கின்றது. முளை விதைகளில் மூன்றாம் வகுப்பு உணவுச் சத்து ஏராளமா யிருக்கின்றது. எனவே இந்தியர்கள் உண்ணா நோன்புறும் நாட்களில் முளைகளை புண்கின்றனர். நிலக்கடலை பசியை வெகுவாய்த் தணிக்கும் உணவாகும். இதில் மாச்சத்து, ப்ரொடின், கொழுப்பு முதலிய சத்துக்கள் வெகுவாய்ச் சம்பந்தப்பட்டிருக்கின்றன.



# செங்குந்த யாத்திரைவாசி

## மூ. மூ. தாண்டவராயப் படலம்

(மித்திரன், தொகுதி 6, பகுதி 3, 65-ம் பக்கத் தொடர்ச்சி)

*நாரதர்* :—(எழுந்து நின்று ஸ்ரீ ஷண்முகப் பெருமானை வணங்கி, சித்திர குப்தனை நோக்கிக் கையமர்த்தி) கருணீக சிகாமணியே! இதோ நிற்கும் வாலிபனைச் செங்குந்தர் முதல்வருக்கு அறிமுகம் செய்ய வேண்டாமா?

*வீரவா* :—நாரதரே! சும்மா உட்காரும். என் அவசரப்படுகிறீர்? அடிக்கடி இப்படித்தானே. போதும் உட்காரும்.

*நாரதர்* :—அசுரர் குலத்தை வேரறக் களைந்தருளிய அறுமுகப்பெருமான் அருந்துணைவ! அப்போதைக் கப்போது ஞாபகமூட்டுகிறேனே யொழிய வேறொன்றுமில்லை.

*சித்திர* :—சர்வலோக சஞ்சாரியாகிய சைவ முனிவரே! யான் விட்டுவிடுவதாக இல்லை. எனினும் ஞாபக மூட்டியதற்காக நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தேவ சேனாபதி செல்வச் சகோதர! இதோ நிற்கும் வாலிபர்தாம் மேற்கூறிய மூத்தையர். இவர் மகா உத்தமர், மிக ஆர்வத்தோடு குலத்தொண்டு இயற்றியவர், மகா தீரர். "கருதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டே' என்ற உயரிய கொள்கையோடு இவர் யாவரிடத்தும் நட்புக்கொள்வது வழக்கம். சமூக சீர்திருத்தத்திலேயே தமது வாழ்நாளைக் கழித்தவர். நியாயத்தை நியாயமென்றும், அநியாயத்தை அநியாயமென்றும் தைரியத்தோடு பகிரங்கமாக இவரைப்போல் எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் தற்போது தமிழகத்தின்கண் வெகு சிலரேயுளர் என்பது மிகையாகாது. சைவாபிமானத்தையே இவர் பூஷணமாகப் பூண்டவர். தமிழிற் கரை கண்டவர். பன்னிரு சைவத் திருமுறைகளையும் ஐயந் திரிபறக் கற்றுணர்ந்தவர்.

திருமுருகக் கடலில் மூழ்கிய முனிபுங்கவராகிய அருணகிரியாரது திருப்புகழ்ப் பாராயணத்தில் நிகரற்றவர். செங்குந்த வீரர், செங்குந்த சிகாமணி. இவரைப்பற்றி விரித்துரைப்பது ஈண்டு வேண்டப்பட்டதல்ல வாகலின் இதனோடு நிறுத்திக்கொள்ளுகின்றேன். பூவுலகின்கண் ஆற்றிய அருந்தொண்டின் பயனாக இவர் இப்போது சிவகணத் தலைவருள் ஒருவராக இருந்து வருகிறார். என்றும் வாலிப உணர்ச்சி குன்றாதவராகையால் கைலாயத்தில் என்றும் வாலிபராகவே இருக்க வரம்பெற்றனர். இவரன்றோ செங்குந்த குல திலகம்! இவரன்றோ செங்குந்த சிங்கம்! கல்வி, அறிவு, ஒழுக்கங்களோடு, பொன்மலர் நாற்றமுடைத்து என்றபடி அவை யஞ்சாது பேசும் ஆற்றலும் நிரம்பப் பெற்றவர்.

*நாரதர்* :—இச் செங்குந்த சிங்கம்........

*வீரவாகு* :—முனிபுங்கவரே! இருங்கள் தயவு செய்து.

---

[114-வது பக்கத் தொடர்ச்சி]

(முத்தையனைப் பார்த்து) அரிய முத்தைய, இம்முண்டகக் கண்ணரைப்பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறுவாயாக.

முத்தையன்:—சூராதி சூரர்களால் பேரிடுக்கணுற்று வருந்திய பூவுலகத்திற்கோர் ஆறு தலையாய் வந்து சரவணப் பொய்கைதனில் விளையாடியருளிய எம்பெருமானை, எம் குலப் பெருமானை, எம் குல முதல்வர் பெருமானை, முக்கட் கரும்பினின் றுதித்த எங்கள் முருகப் பெருமானை, வலமழு உயரிய நலமலி கங்கைநதி தலைசேர்ந்த கற்கருணைக் கடலகத்துத் தோன்றிய எங்கள் ஆராவமுதனை, மனோவாக்குக் காயங்களால் உன்னி, வாழ்த்தி, வணங்கி, எங்கள் மூதாதையராகிய நிகரற்ற புகழ்பெற்ற நிரலுற்ற நீரவீரர்களுக்கும், இச்சபையின்கண் எழுந்தருளியுள்ள ஏனையோர்களுக்கும் சிறியேனது தாழ்மையான வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு எனக்குத் தெரிந்த மட்டில் கூறத் துணிந்துள்ளேன். பெரியோர் பிழை பொறுத் தருள்க.

(முத்தையர் பேசியவற்றைப் பேசியவாறே எழுத யான் சிறிதும் ஆற்றலுடையே னல்லேனுகையால் விஷயத்தை மட்டும் சுருங்கத் தெரிவிக்கிறேன். தங்கு தடையின்றி வாயுவேகம் மனோவேகத்தோடு சோனு மாரிபோல் பொழிந்த அவரது சொற்பெருக்கைத் தொடர்ந்து சென்று பொருளுணர்ந்துகொள்ளவும் சக்தியற்றவன் யான் என்பதை முன்னதாகவே சொல்லிவிடுகிறேன்)

இத்தகைய பேரவையில், தெய்வ சபையில், இதுகாறும் பேசி யறியாத சிறியேன் புன்மொழியைப் பெரியோர்கள் போற்றி ஆசீர்வதிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

(முத்தையர் தெய்வ சபை என்ற உடனே எனக்குத் திடிரென்று ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அதாவது தெய்வ சபைகளிலும், தேவர்களாலும் பேசப்படுவது தேவ பாஷையாகிய சமஸ்கிருதம்தான் என்றும், கடவுளர்க்குக் கூறும் தோத்திரங்களும் மந்திரங்களும் அப்பாஷையிலேயே இருக்கவேண்டு மென்றும், ஏனைய மொழிகளாற் கூறின் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்றும் பூலோகத்தில் கேள்விப்பட் டிருக்கிறோமே. ஆனால் உண்மையில் இங்கு வழங்கும் மொழி தமிழா யிருக்கிறதே என்பதே யாகும். பின்னர் உண்மை இவ்வாறாக இதற்கு மாறாக உலவும் பொய் வதந்தி தமிழின் பெருமையையும், செல்வாக்கையும் ஒரு சிறிதும் காணாத சுயநல அறிவிலிகளின் கூற்றென்றே உணர்ந்து எனக்கு நானே சமாதானம் சொல்லிக்கொண்டேன்.)

முத்தை:—எனது அரிய பெரிய மூதாதையாரே! இத்தாண்டவராய முதலியாரை எங்கள் நாட்டில் முண்டகக் கண்ணர் என்றால்தான் சுலபமாகத் தெரிந்துகொள்வார்கள். எனக்கு இவர் மாமா. ஆகையால் யான் இவரை முண்டகக்கண் மாமா என்றுதான் சொல்லுவது வழக்கம். என் தாயார் இவருக்குத் தங்கையா யிருந்தும் இவர் செய்த கொடுமைகளைப்பற்றி அடிக்கடி சொல்லி யிருக்கிறார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே இவரை எப்படி அடக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்து வந்தது. சில சமயங்களில் மு. மாமாவை அடக்குவார் ஒருவருமில்லையா என்று யான் என் தாயாரைக் கேட்பதுமுண்டு. அச்சமயங்களில் என் தாயார் "அந்தோ! அப்பாவியோடு பிறந்தது போதும். ஆங்காங்கு ஊர் சாபனையை என் காது கொண்டு கேட்டு முடியவில்லையே. இதுவரையில் அடக்குவார் இல்லையே! இனி யார் அடக்கப்போகிறார்கள்?" என்று பெருமூச்சு விட்டுச் சொல்வதுண்டு. அப்போது "அம்மா நான் கூடவா செய்ய மாட்டேன்?" என்று யான் மறுமொழி கூறியது எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது. அதைக் கேட்ட தாய்க்கு ஒரு பக்கம் சந்தோஷம், மற்றொரு பக்கம் பயம். உடனே என்னை மார்போடு அணைத்துக்கொண்டு, என் வாயைக் கையால் மூடிக்கொண்டு 'அப்பா இது மாமா காதில் விழுந்தால்! கம்சன் கதையாய் விளையுமே!' என்று சொல்லிக் கம்சன் கொடுமையையும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பெருமையையும் எடுத்தோதுவார்கள். பயம் அறியாத யான் 'அம்மா மாமாவை ஒரு கை பார்த்தே விடுகிறேன்!' என்று சொல்லிக் குதிப்பேன்.

யான் பள்ளியில் பயின்று எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக்கொள்ளும் காலத்தில் ஒரு நாள் ஒரு கரித்துண்டை எடுத்து எங்கள் வீட்டுத் தெருச் சுவரில் "ஊரை அடித்து உலையில் போடும் முண்டகக் கண்ணன்" என்று எழுதிப் பார்த்தேன் தப்பில்லாமல் சரியா யிருந்தது. சந்தோஷம் பொங்கிற்று. அன்று அங்கு வந்த முண்டகக் கண் மாமா அதைப் படித்துப்பார்த்து, இவ்வளவு தைரியமாய் எழுதக்கூடியவன் யானுகத்தான் இருக்கவேண்டு மென்று யூகித்து என்னை உடனே வரவழைத்து 'இது யார் எழுதியது?' என்று அதட்டிக் கேட்டார். 'ஆமாம் மாமா நான்தான் எழுதினேன். ஊரில் எல்லாரும் வாயால் சொல்லுவதை நான் எழுதிப்பார்த்தேன். அதில் ஒன்றும் தப்பிதமில்லையே மாமா. கண்டது எழுதப் பண்டிதனுவாய் என்று உபாத்தியாயர் சொல்லி யிருக்கிறார். இப்போதுதான் எழுத்துக்கூட்டக் கற்றுக்கொள்ளுகிறேன். ஏதாவது தப்பித மிருந்தால் அடியுங்கள். உபாத்தியாயர்கூட அப்படித்தான் செய்வது வழக்கம். ஆனால் எழுதிய வரையில் சரியென்றே எண்ணுகிறேன் என்று சொல்லி நகைத்தேன்.' முண்டகக் கண்ணர் கோபங்கொண்டு என்னை ஓங்கி யடித்தார்.

யான் அழுதுகொண்டே போய் என் தாயாரிடம் நடந்தவற்றைக் கூறி 'நான் சரியா யெழுதி யிருக்கும்போது முண்டகக்கண் மாமா என்னை அடித்தார். தப்பித மிருந்தா லல்லவோ அடிக்க வேண்டும்' என்றேன்.

தாயார் (என்னை அணைத்துக்கொண்டு) 'அப்பா! அவன் இரக்கமில்லாப் பாவியாயிற்றே. ஊர் சொத்துக்கு உலை வைக்கிறவனாயிற்றே. நீ அப்படி எழுதலாமா?' என்றார்.



யான் 'அம்மா! நீங்களே அவரை இரக்கமில்லாப் பாவியென்றும், ஊர் சொத்துக்கு உலை வைக்கிறவரென்றும் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். இப்படியிருக்க நான் எழுதியதில் மாத்திரம் என்ன தப்பித மிருக்கிறது? எழுத்துப் பிழையும் இல்லையே. மாமா கோணலான மனிதன்போ லிருக்கிறது. நான் அவரைத் திருத்துகிறேன். இல்லையேல்...........' என்று வாயெடுத்தேன்.

யான் சொல்லி முடிக்குமுன் என் தாய் என் வாயை மூடிக்கொண்டு 'ஐயோ! 'இளங்கன்று பயமறியாது' என்றபடி இன்னும் பயம் என்பதை அறியா யாகையால் நீ இப்படிப் பேசுகிறாய். மிகப் பெரியவர்கள்கூட அவர் பெயரைச் சொன்னால் பயப்படுகிறார்களே' என்றார்கள்.

யான் 'அம்மா! நீர் சொல்வது ரொம்ப நன்றாயிருக்கிறதே! 1008 அண்டங்களை ஆண்டு வந்த கொடுங்கோல் மன்னனாகிய சூரபத்மனையும், அவன் வம்சத்தவரையும் போர் முகத்தில் முருகவேளுடனிருந்து அழித்து வெற்றி மாலை சூடியதன்றி, முசுகுந்தச் சக்கரவர்த்திக்குப் படைத்துணைவரா யிருந்து பல நாட்டரசர்களை வென்று ஜெயக் கொடி நாட்டியும், இன்னும் அளவிறந்த வீரச் செயல்களைச் செய்தும், அழியாப் புகழ்பெற்ற வீரர்கள் பரம்பரையில் தோன்றியவர்கள் நாங்கள் என்று சொல்லி உற்சாக முண்டாகுமாறு அடிக்கடி எனக்கு வீரமூட்டும் பாடல்களையும் சொல்லிக் கொடுத்து உணவுடன் வீரத்தையும் ஊட்டி யிருக்கின்றீர்களல்லா? சிங்கத்தின் வயிற்றில் நரி பிறக்குமா? நியாயத்தை எடுத்துக்காட்டப் பயப்படலாமா? அநியாயத்திற்கல்லவோ பயப்படவேண்டும். அம்மா இது உமக்குத் தெரியாததா! உங்கள் தகப்பனரிடத்தில் கற்காவிடினும் கேட்டுணர்ந்த சகல சாஸ்திரங்களையும் எனக்கெடுத்தோதிய உமக்கு மாமா விஷயத்தில் மாத்திரம் ஏன் பயமுண்டாகிறது?' என்றேன்.

'இது என்ன கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலிருக்கிறதே! இனி இந்த ஊரில் இப்பிள்ளையோடு இருக்கத்தகாது. இருந்தால் என் அருமை மைந்தனை இழக்க நேரிடும்போ லிருக்கிறது.' என்று சொல்லி என் தாயார் பெருமூச்சு விட்டார்கள். அது முதல் என்னை வெளியே போக விடாமலும், பள்ளிக்கனுப்பாமலும் வைத்திருந்து அடுத்த வாரத்திற்குள் 10 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்கு என்னை அழைத்துக்கொண்டு குடி போய் விட்டார்கள். அது முதல் அநேக ஆண்டுகள் மாமாவை நான் பார்க்கச் சந்தர்ப்ப மில்லாமலிருந்தது.

மாமாவின் அக்கிரமங்களைப்பற்றி அடிக்கடி கேள்விப்பட்டாலும், சிறுவனுகையால் தாய் தந்தையரின் ஆணையை மீறி நடக்கக் கூடாமலிருந்தது. 18 வயதில் வேலை ஆரம்பித்தேன். பல விதத்தில் முண்டகக் கண்ணரைத் திருத்த முயன்றேன். இவர் பல்லாற்றானும் என்னை ஹிம்சித்ததன்றி இரண்டொரு தடவைகளில் கொல்லவும் முயன்றார். தம் பிழையை உணர்ந்து இவர் திருந்திய பாடில்லை. எங்கள் நாட்டைச் சேர்ந்த பல்லூராரும் இதை அறிவார்களாகையால் இவரே கஷ்டிக்குக் காரணமென்றும் கஷ்டியே நாட்டின் கேட்டிற்குக் காரணமென்றும், நான் எடுத்துக்காட்டினவுடனே ஜனங்கள் அதை யுணர்ந்து இவர்மேல் ஆத்திரங்கொண்டு திரண்டு வந்து இவரை அடித்துத் துரத்தத் தீர்மானித்தார்கள். அதை யறிந்த யான் அங்கு விரைந்து சென்று கையமர்த்தி அமைதி புண்டாக்கி,

> 'அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை'

என்னும் திருக்குறளைத் தலையங்கமாக வைத்துக்கொண்டு பேருரை யாற்றினேன். ஜனங்களிடைப் பேரமைதி புண்டாயிற்று. என் சொற்பெருக்கின் சாராம்சம் பின் வருமாறு.

(தொடரும்)

## வட இலங்கைச் செங்குந்தர் சங்கத்தின் ஆண்டு விழா

மேற்படி விழா ஜூன் மாதம் 3, 4, 5 தேதிகளில் யாழ்ப்பாணத்தில், மகாநாட்டு முறையில் வெகு விமரிசையாக நடைபெறும். அதற்குத் தலைச் சங்கத்தின் பிரதிநிதியாகப் பிரசாரகர் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் செல்வார்கள். இலங்கையிலுள்ள செங்குந்தரும் இந்தியா முதலிய வேறு பாகங்களிலுள்ள செங்குந்தரும் சகோதர பாவத்துடன் கலந்து அளவளாவி இன்புறுதற்கேற்ற இச்சந்தர்ப்பத்தினை அன்பர்கள் பெரிதும் பயன்படுத்திக்கொள்வரென நம்புகிறோம்.




## சிறுகதைச் செய்யுட் கோவை

### "வேண்டி வினை செயேல்"—வேந்தனுந் தவசியும்

[திரு. வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

சீருறு மகத நாட்டிற்
செவந்திமா புரமென் றோதும்
பேருறு நகரை யாண்டோன்
பிறங்கல்சேர் மணித்திண் டோளான்
காருறு வஞ்ச நெஞ்சக்
கயவன்மாத் தீமை யாவு
மோருருக் கொண்ட தென்ன
வுதித்தவன் புவிமே லம்மா ! 1

விக்ரம கேது வென்னும்
வியத்தகு நாமம் பூண்டோன்
அக்ரம வழியில் நிற்போர்க்
காதர வளிப்போன் மிக்க
வுக்ரம வாட்சி யாலங்
குறுபகை வெல்வோன் மேலாஞ்
சக்ரம நெறியை யோராச்
சழக்கனே யாகி புற்றான். 2

முன்செய்நல் வினையின் பேற்றால்
முதுநகர் செவந்தி யாளும்
மன்னிலை பெற்று னின்ப
வாழ்க்கைகற் றுணைவி யோடு
நன்னிலை மக்கட் பேறும்
நவநிதிக் குவிய லோங்கித்
தன்னிலை மேம்பா டுற்றான்
தவத்தினும் பெரிதொன் றுண்டோ. 3

இங்கிவன் வாழு நாளி
லிவனகர்க் கொருசார் தன்னில்
பொங்குவெங் கானத் தூடு
புலனவித் தியோகு செய்புந்
துங்கமா தவத்தின் மேலான்
சுகுணப்பேர் முனிவரன் றன்
றங்கினோன் பாற்றி வந்தான்
றூாணி செழிக்க மாதோ. 4

வேறு

நீண்டசடை யிம்முனிவ
னெவலையருள் நீதிதனில்
"வேண்டிவினை செய்யே"லென்
பதைமேலாக் கடைப்பிடித்துக்
காண்டகுசீர் மந்திரமா
யெப்போதுங் கழறிவரு
மாண்டகமை தனில்மிக்கா
னவன்பெருமை யளக்கரிதால்.

மனத்துறவு மிகப்பூண்டு
மாயையெலா மறக்கடிந்து
சினத்தையட ரிவன்பக்கல்
"சிவயோகி வாசமுறுந்
தனித்தவிட மூங்காசி
தானு"மெனு மொழிபோல்
வனத்தினிடை பலமாந்தர்
வைகலுமே வந்துறுவார்.

வந்தவருக் கருள்நல்கி
மற்றவர்தங் குறைபாட்டை
மூந்தைவினைப் பயன்கூடு
மூயற்சியினு லிம்முனிவன்
சிந்தைதனி லார்வமுடன்
சிவனருளால் தீர்த்திடுவன்
எந்தைபிரா னருள்பெற்றோர்க்
கெளிதன்றோ வெச்செயலும்.

எப்போதும் வந்தவருக்
கிம்மொழியே மந்திரமாய்
தப்பாமல் 'வேண்டிவினை
செய்யே'லென் பதைச்சாற்றி
"இப்பாரில் நீநெடுநாள்
வாழ்க"வென வின்மொழிகள்
செப்பிவரு மிவன்புகழ்ச்சி
திசையெட்டுஞ் சென்றனவால்.

இச்செய்தி நகராளு
மெழில்வேந்தன் கேள்வியுற்று
மெய்ச்சமய முனிவரனை
யான்விட்டு விளித்திடலும்
அச்சமிலா தன்னவனும்
"அரசனையே வரச்சொல்வீர்
நச்சுமவன் பெருமையெலாம்
நானறிவே"னென நவின்றான். 9

அம்முனிவன் புகன்றவெலா
மரசர்கோ னிடஞ்சென்று
செம்மையுடன் காவலர்கள்
செப்பிடலுஞ் சினங்கொண்டு
இம்மெனு னிங்கவரை
யின்றழைத்து வருவனென
வெம்மைமிகு விறல்வேந்தன்
வெங்கானந் தனிலுற்றான். 10

கானடைந்த மன்னவனுங்
கடுந்தவசி தனைக்கண்டு
"யானடைந்த பெரும்பேறு
யார்பெறுவார் நும்மடிமை
தானடைந்தே னின்சரணந்
தமியேனை" யாளென்று
கோனடைந்த துயர்நோக்கிக்
கூறிடுவா னருந்தவனும். 11

"ஈண்டெமது பதம்பணிபு
மேந்தால் ! நீ யெஞ்ஞான்றும்
நீண்டபெருஞ் செல்வமுட
னின்மனம்போல் வாழ்ந்திடுக
வேண்டிவினை புரியற்க
மேதினியி லுயிர்க்"கென்னும்
மாண்டகுமிவ் வார்த்தைதனை
யப்போதும் வழங்கினனால். 12

குதர்க்கமுறு மவ்வரசன்
கோதில்முனி வாக்கியத்தை
எதற்கும்பரி சோதிப்போ
மிவன்பாலோர் தீங்கிழைத்தே
யதற்கென்ன நடக்கின்ற
தறிவோமென் றகத்தன்னி
விதர்ப்புடனே யடிபணிந்து
'விண்ணப்பம் கேட்டி'யென்றான். 13

"மும்மலத்தின் றனையவிழ்த்த
மூதறிவோய் ! எம்மூர்க்கு
செம்மையுட னெழுந்தருளிச்
சிறியேன்றன் மனையடைந்து
அம்ம விரு நலனெய்த
வமுதுபுசித் திடல்வேண்டு
மும்மைச்சர ணடைந்தேற்கிவ்
வரமுதவு" கென்றுரைத்தான். 14

ஆங்கதற்குத் தவமுனிவ
னிசைந்தருளி யரசனுடன்
ஓங்குதிருச் செவந்திநகர்
மணிமாட முற்றிடலும்
பாங்குடனற் றவிசிட்டே
யுபசாரம் பலசெய்து
தீங்குசெபு மனத்தரசன்
றேவிதனக் கிவைசெப்பும். 15

"இம்முனிவன் புகல்நீதி
சோதிக்க விவனருந்தும்
செம்மைமிகு மன்னமதில்
விஷஞ்சேர்த்து வுண்பிக்கின்
வெம்மைவினைப் பயனுலர்ப்ப
விதிகிழிந்து மடிந்திடுவ
னெம்மட்டி லிவன்வாக்ய
முண்மையென்ப தறிவேனால்". 16

என்றவுட னவ்வண்ண
மடிசில்முத லெல்லாமு
மொன்றவிஷங் கலந்தாக்கி
புண்மைமிகும் பக்தர்கள்போல்
சென்றடியிற் றம்பதிகள்
சிரம்வணங்கி யடியவரைக்
கொன்றிடுமூட் கருத்தோடு
வமுதுண்ணக் கூவினரால். 17

பின்வருவ தோராதார்
பெருமான்ற னடியவரை
இன்மொழிகள் பலகூறி
"யெழுந்தருள்வீ ரிலைபோட்டு
அன்னமெலாம் வட்டித்திங்
காயின"தென் றேயிறைஞ்ச
வன்மனத்துக் கயவருளந்
தெரிந்தமுனி வகுத்துரைப்பான். 18

"தக்கோர்க ளஞ்ஞானஞ்
சாருமென்ப ராதலினு
லெக்காலு மிலைபோட்டுப்
புசித்தறியோ" மெனநவின்றான்
அக்காவ லன்பின்னு
"மருந்தவரே ! கரமேற்று
இக்கால மமுதுபுசித்
திடலாமோ" வெனுமளவில். 19

தடுக்கறியாக் கொடுங்கோப
சன்னதனுய் முனிதோன்ற
திடுக்கிட்டுப் புரவலனுந்
தேவியுமாய் நனிபயந்து
அடுக்களையி லிருந்ததொரு
தாழிதனை யழைப்பித்து
'எடுத்தொருபொன் றட்டிலிந்த
வன்னமெலாம் வை'யென்றார். 20

அப்படியே யவள்செய்ய
வருந்தவனுர் முன்வைத்து
'எப்படியு மிதையேற்றுக்
கொளவேண்டு' மெனநவின்று
வைப்பெனமா நிதியமொடு
மணிமாலை கொடுத்தரசன்
கைப்பிடியா புடனெடுத்துக்
கடுங்கானஞ் செல்கென்றான். 21

நல்லதென வம்முனிவ
னஞ்சமுதும் மணியாரம்
ஒல்லையினிற் கனகமெலா
முடன்கொண்டு கானுறலும்
வல்லியமான் வேட்டையிலிம்
மன்மகனுங் களைப்புற்று
'அல்லல்கெடும் பசியாலிங்
கனுத்தடைந்தே' னெனப்பணிந்தான். 22

பணிந்திடுகோ மகன்முகத்தைப்
பரிவினெடும் பார்த் "தந்தை
யணிந்திடுமுத் தாரமொடு
வரும்பசிக்குச் சுசியன்னம்
துணிந்தளித்தா னெந்தனுக்குச்
சுகமுடனீ "புண்டுபசி
தணிந்திடுக" வென்றுரைத்தான்
சாதமதில்விஷ மறியான். 23

முந்தைவினைப் பயனுந்த
முடுகிடுவெம் பசியீர்ப்பத்
தந்தைதரும் விஷச்சோற்றைத்
தவசிகொடுத் திடவாங்கி
சிந்தைமகிழ்ந் திளங்கோவுந்
தின்றுவி துறந்தனனல்
வந்துறமோர் வினைச்செயலை
மறுத்திட வல்லாருளரோ ! 24

வேட்டைக்கே புடன்சென்றோர்
மிகவெருவி வேந்தனிடம்
ஓட்டமதாய் வந்தடைந்து
"வுன்மகன்றன் வெம்பசியால்
வாட்டமதாய்த் தவசிமுழை
வரவவன்பால் நீரளித்த
ஓட்டமிகு மமுதயின்ற
வுயிர்துறந்தா" னெனநவின்றார். 25

மாண்டனனின் மகனென்னும்
வார்த்தைசெவி படுமுன்னம்
நீண்டபெரும் பனையென்ன
நிலத்தினிடை வீழ்ந்தாற்றி
'வேண்டிவினை செய்யேயென்
பதையெள்ளி வினைசெய்தேன்
ஈண்டுன்னைத் துறப்பதற்கோ
லென்மகனே' யென்றழுதான். 26

அழுதாற்றி யாவலுட
னருங்கானஞ் சென்றடைந்து
'தொழுதுபணி கேட்டெனக்குத்
துணைபுரிவோர் பலரிருக்க
வெழுதுமயன் றன்விதியோ
யிவ்விடத்தில் நீமாண்டாய்
பழுதென்றோ வென்முகத்தைப்
பாராதிங் கிருப்பதுவே. 27
நாவென்று நினைத்திடவிஞ்

ஞாலமதில் நற்றெய்வந்
தானென்று நினைத்திட்ட
தன்மையெவர் பாலுரைப்பேன்
தேனென்று மென்மழலைச்
செவ்வாயி னிளங்குமரா
காவென்று புற்றரையோ?
நின்பாயல் கழறுகவே. 28
தன்வினையே தனைச்சுடுமா
லென்றுரைப்பார் தக்கோர்கள்
என்வினையே யெனைச்சுட்ட
தின்றறிந்தேன் யாஞ்செய்யும்
முன்வினையோ பின்வினையோ
முனரிவா னவன்வகுத்த
நின்வினையோ கொடுங்கானில்
நீமாள நேர்ந்ததுவே. 29

அருந்தவனுக் கெனவடிசி
லாக்கிடுநின் றாய்பாலோ
பொருந்துவிட மதிற்கலந்த
புன்மையனென் பாலேயோ
வருந்துமுனக் கதையளித்த
மாமுனிவன் றன்பாலோ
இருந்திடுநின் னுயிர்மாய்த்தப்
பழியெவர்பா லேகியதே. 30

செய்தவினை செய்தா
ருடனென்ற செம்மொழிபோ
லெய்தியதே யான்செய்த
தீவினைக ளென்னிடமே
பிய்தலுற நின்னுயுள்
பெரும்பழியைச் செய்தேற்கு
வுய்தலுண்டோ விப்பிறப்பில்
வாய்திறந்தொன் றுரையாயோ". 31

என்றுபல விதம்புலம்பி
"யென்மகன் நீ! யிறக்க
துன்றுநெடும் புவியாளத்
துணிவேனோ நீயின்ற
கன்றனுறும் விஷச்சோற்றின்
மிகுதியினைக் களிப்பாக
தின்றுவுயிர் துறந்திடுவேன்
தீங்கரும்பே!" யெனமொழிந்து. 32

அந்தகடு மூரல்தனை
யயின்றரசன் றான்மடிந்தான்
சிந்தைகளிப் புடனேயச்
சிவயோகி தவத்திருந்தான்
இந்தகதை யாலுலகீர் !
எவர்க்குமொரு தீங்குசெயின்
வந்துநமைப் பீடிக்கு
மெனுவாய்மை மனத்துணர்வீர். 33

தினைவிதைத்தோ ரிப்புவியிற்
றினைமாரு லடைவதுபோல்
வினைவிதைத்தோ ரதற்குரிய
வினைப்பயனே நுகர்ந்திடுவார்
வனப்புறமிக் கதையில்வரும்
வாக்கிய நீதியனைத்தும்
நினைப்புடனே கைக்கொண்டிங்
கனுட்டிப்பீர் நேயர்களே 34

இவ்வண்ண மான்றோர்சொல்
நீதிமொழி யின்படியா
மவ்வண்ண மொழுகியிரு
நலனடைய வருள்புரிவான்
றெவ்வர்களை யுயிர்மாய்த்துத்
தேவர்சிறை மீட்டபிரான்
செவ்வண்ணக் கழன்மலரைச்
சிந்தித்து வணங்குதுமால். 35

சுபம் !  சுபம் !!  சுபம் !!!

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவரும்
செங்குந்தர் கல்விநிதிக் காப்பாளர் சபையின் ஆயுட்காலத் தலைவரும்
புதுவை அரசாங்க அமைச்சருமான

## உயர் திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியார், பி. ஏ., பி. எல். அவர்கள்

## ஷேவ்வாலியே தேலா லேழியோங்தோனேர்

(Chevalier De La Legion D'Honneur)

என்னும் மாபெரும் பட்டம் பெற்றமைக்காகத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினரும்
செங்குந்தர் கல்விநிதிக் காப்பாளர் சபையினரும் மன மகிழ்ச்சியுடன் அன்னார்க்கு வழங்கிய

# பாராட்டு நல்லுரை

**திண்ணிய உணர்வும் கண்ணிய வாழ்வும் பண்ணுறப் புனைந்திடும் புண்ணிய புருஷரே !**

தங்களது இணையிலா ஆற்றலையும் அலகிலாக் குணத்தையு முணர்ந்து பிரென்சுக் குடியரசார் தங்கட்கு ஷேவ்வாலியே தேலா லேழியோங்தோனேர் என்னும் பெரும்பட்ட மளித்தமை கண்டு உளம் பூரிக்கும் உரிமை, தாங்கள் பிரென்சு, ஆங்கிலம், தென்மொழி, வடமொழி, தெலுங்கு, ஹிந்தி முதலிய பல பாஷைகளையும் ஆழ்ந் தாய்ந்து, வேதாந்தத்தின் சுவை தேர்ந்து, சைவ முதலிய பல சமயங்களின் நுண் பொருள்களை ஆய்ந்து தெளிந்து, சரித்திரம் சாத்திரம் முதலிய பல கலைகளையும் தெள்ளிதி னுணர்ந்து, பொதுவிலேயே உலக ஞானமெனும் உததி குடித்து, இராஜீய நிர்வாகம் முதலியவற்றில் திறமை சான்று, தூய்மை யுருவான இல்வாழ்வினை மேற்கொண்டு, தங்க ளருங் குணங்களுக்கும் ஆற்றலுக்கு மேற்ற அரசாங்க அமைச்சர் பதவி வகித்து விளங்குவதையும், கோதிலாக் குணக்குன் றேறி நிற் றலையும் நன்குணர்ந்திருப்பதோடு தங்களைத் தலைவராகவும் பெற்றுள்ள எங்களுக்கன்றி யாருக்குண்டு ?

**குந்தர் குலக் கடல் குலவிடு முத்தே !**

இத்தகைய அரும்பெருங் குணங்கள் பூரணமாய் அரும்பியுள்ள தங்களைப் பெற் றெடுத்த நங்குலத் தாயின் பேறுதா னென்னே ! தங்களது மேன்மையையும் தாங்கள் நங் குலத்திற் காற்றிவரும் பெருந் தொண்டுகளையும் அறியும் நாங்கள் தங்கட்குத் தகுதியான கைம்மாறு காணுதும், தங்கள் புகழினைச் செவ்வனே எடுத்தோத வியலாதும், "முகிற்கடற் பிறவா முத்தே யென்கோ ! மலையிடைப் பிறவா மணியே யென்கோ ! குவலயம் பெற்றிடாக் குணமணி யென்கோ! குந்தர் தம் தலைமைகொள் குருவே யென்கோ!" என மயங்கி நிற்கின்றோம்.

**உத்தம உருவே ! முத்தைய முதலே !**

பெயருக்கேற்ற பெற்றியுடைய தங்களைச் செங்குந்த உலகம் மட்டும் குலாபிமானத் தாற் போற்றுகின்றதில்லை; தங்களை அறிந்த ஒவ்வொருவருமே போற்றுகின்றனர். மக்க ளெல்லாம் தங்கள் புகழொலி முழக்குகின்றனர்; பத்திரிகைகள் தங்கள் மேன்மை கூறி முரசறைகின்றன. ஏன்? கண்டார் பிணிக்குந் தகையதான தங்க ளுருவமே தங்களது குண மேம்பாட்டுக்குச் சான்று பகர்கின்றது ; கேட்டார் பிணிக்குந் தகையவான தங்க ளுபதேசங் களே தங்களது அறிவு மேம்பாட்டுக்குச் சாக்ஷியங் கூறுகின்றன ; தங்களது இராஜீய நிர் வாகமே தங்களது ஆற்றலுக்கு உதாரணமாக நிற்கின்றது.

**நாவினி லடங்கா நலம்பல கொண்டோய் !**

தங்களது சீரிய குணங்க ளனைத்தையும் கணக்கிட்டுரைக்க வல்லேம் யாமல்லேம். இச் சிறு தாளும் அவை யனைத்திற்கு மிடந் தரவல்ல தன்று. தங்களை எங்களிடைத் தோற்றுவித்தமைக்காக நங்குல நாயகனை மனமாரத் துதித்தேத்தும் நாங்கள், அப்பெரு மானையே நோக்கி, "தங்க ளருள்வழித் தோன்றிய நங்குல மகாத்மாவுக்கு வளர்ந்திடு ஆயு ளருள்தி ! திகழ்ந்திடு தேக மருள்தி ! நிரம்பிடு செல்வ மருள்தி ! நின்னருட் டிருவடி யருள்தி !" என இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

தங்கள் மேன்மை யுணர்ந்து தங்களை என்றும் போற்றிடும்,

சென்னை
26—8—32

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினர்,
செங்குந்தர் கல்விநிதிக் காப்பாளர் சபையினர்.

மாட்சிமை தங்கிய பிரஞ்சுசர்க்காரால் ஷேவ்வாலியே தேலா லெழியோங்தோனேர்
என்ற கௌரவப் பட்டம்பெற்ற பிரெஞ்சிந்திய சர்க்கார் அமைச்சர்

உயர்திரு ஆ. வே. முத்தைய முதலியாரவர்கட்குச்

செங்குந்தர் சங்கத்தினர் நடத்திய உபசரிப்புக் கூட்டத்தில் வாசித்த

## 'உபசார வாழ்த்துப் பாக்கள்

தேர்செலுத்தும் திருவீதிப் புதுவைமுத்த புரிவாழ்வே! சீர்ச்செங் குந்தப்
பேர்செலுத்தும் பெருமரபிற் பிறந்துகலை பெற்றுயர்ந்தே ஆணை தன்னைப்
பார்செலுத்தும் பிரஞ்சிந்தி யாதுரைத்த னத்தமைச்சுப் படைத்த கீர்த்தி
கேர்செலுத்தி மரபுநலம் நிலம்செலுத்தும் முத்தைய! எங்கள் நிதியே!

வருவர்ஒன்று நற்பிரஞ்சிந் தியதுரைத்த னமைச்சாய் வந்து நாளும்
தருவர்ஒன்று பெறுவம்என்ற ஆசையின்றிக் குடியரசும் தானும் ஆன
இருவர்ஒன்று தான்என்ற பொறுப்புளத்தால் நீயுழைத்த இன்உழப்பை
ஒருவர்ஒன்று சொல்லாமல் காத்துவந்தாய் முத்தைய! உயர்ந்தாய் இன்றே.

நெற்பெருக்கும் வளப்புதுவை நிலைபெருக்கும் முத்தையப் பெரியோய்! நீண்ட
விற்பெருக்கும் துரைத்தனத்தின் மேன்மைபெறு நிருவாகச் சுமையை நீதான்
மற்பெருக்கும் தோளிரண்டில் மாற்றிச் சுமந்தபடி வாயோ யாமல்
பொற்பெருக்கோ எனஇனிய சொற்பெருக்காற் றித்திகழ்ந்தாய் பொதுமக் கட்கே

முகைமுகத்தே பொழில்வண்டு முகம்வைக்கும் நற்புதுவை முத்தையாவே!
பகைமுகமே நண்பர்முகம் என்றன்பு பாராட்டலோடு யாண்டும்
புகைமுகங்கொண் டறியாது புதியமுகம் நின்னகத்தே போந்தா லும்புன்
னகைமுகமே கொள்ளுமுனைப் பெற்றதெனில் எஞ்சமுகம் நற்சமுகமே!

கோடுமுன்னேற் றுந்தருக்கள் குளிர்நிழல்சே ரும்புதுவை முத்தையாநீ
காடுமுன்னே றிற்று நெடுங் கடலும்முன்னே றிற்றுபிற கண்டத் துள்ளார்
பீடுமுன்னே றிற்றேஎன் றெண்ணிநமைப் பெற்றெடுத்த பெருமை வாய்ந்த
நாடுமுன்னே றத்தினமும் நாடுகின்றாய் மனோவாக்குக் காயத் தாலே.

சரோருகத்து நல்லன்னம் தங்குபுனற் றடஞ்சூழும் புதுவை தன்னில்
சிரோதயம்செய் நாள்முதலாய் முத்தைய! சீரடைந்த இந்நாள் மட்டும்
விரோதமிலை ஒருவர்க்கும் என்பதொடு பொதுநலமே மேவு முண்மை
புரோக்ரேசீஸ் தென்றனழிற் புனிதர்சபைக் குழைப்பதனாற் புலனா மன்றோ?

கலைமயங்கும் சபையோரும் கருத்தினிலே பலபேதம் கண்ட பேரும்
நிலைமைதனைச் சீர்தூக்கத் தலைமைகொள நினையழைப்பர்! பன்னூல் ஆய்ந்து
புலமைகொளும் முத்தையப் பெரியோய்நம் எழிற்புதுவை தன்னில் நீதான்
தலைமைவகிக் காதஒரு சனக்கூட்டம் இல்லையன்றோ தகைமை மிக்கோய்!

ஒவ்வாரும் ஒப்புகின்ற ஒழுக்கமுயர் முத்தையப் பெரியோய்! மேன்மை
எவ்வாற்றா னும்சிதையாப் பிரஞ்சுதுரைத் தனத்தார்நின் ஏற்றங்கண்டு
தெவ்வார்மேற் செல்லுகின்ற குதிரைவீ ரப்பட்டம் என்று செப்பும்
ஷேவ்வாலி யேதேலா லெழியோங்தோ னேர்தந்தார் சிந்தை ஆர்ந்தே.

தழல்அண்டும் வீரத்தார் நின்நண்பர் இந்நாட்டுத் தலைவர் அன்றோ?
கழல்அண்டும் அரசினர்கள் நின்தொண்டாற் கண்டருசி மிகுதி யென்பர்!
சுழல்அண்டும் குதிரைவீ ரப்பட்டம் சூடவும்கொள் முத்தையா நின்
நிழல்அண்டும் செங்குந்தர் ஆயாசம் தீருவது நிலையே அன்றோ?

தாரகையின் நடுவிலொரு சந்திரன்போ லப்புதுவை சார்செங் குந்தச்
சீர்மரபிற் பிறந்திந்நாள் சிறப்புற்றாய் அதுஎங்கள் பெருமை யாதல்
ஆர்உவகை சகிதம்உனைப் போற்றுகின்றோம் அன்புசேர் முத்தையாநின்
பேர்வாழி பெண்டுபிள்ளை கள்சுற்றம் நண்பரொடும் ஆயுள் பெற்றே!

ஆக்கியோன் கனக. சுப்புரத்தினம். — செங்குந்தர் சங்கத்தார், 28—8—1932 புதுவை



# நிருபம்

அன்புசான்ற பெரியீர்,

நமது செங்குந்த மித்திரனுக்கு இப்போது 6-ஆவது வயது நடந்து வருகிறது. இதுவரையும் அதன் மூலமாய் அநேக நற்போதனைகளையும் வியாசங்களையும் வாசித்தறிந்திருக்கிறோம். அன்றியும் இதுவரை மூன்று மகாநாடுகளைக் கூட்டிப் பல போதனைகளைக் கற்றுக்கொண்டோம். அவைகளெல்லாம் எங்களுக்கு ஒருவிதமான உற்சாகத்தை யளித்திருக்கின்றன.

என்றாலும் இப்போது இந்தத் திருநெல்வேலியிலும் மற்றும் பற்பல இடங்களிலுமுள்ள நம்மவர்கள் பிழைப்பிற்கு வழியில்லாமல் தயங்குவதை நாங்கள் பார்த்துச் சகிக்க வொண்ணாத துயரத்தையடைந்துகொண்டிருப்பதினால் அதை நிவர்த்தி செய்யும் வழி ஏதேனுமுண்டா வென்பதைப்பற்றி நமது தலைச்சங்கம் ஆலோசிக்க வேண்டுமென்றும், அது விஷயமாய் நாங்கள் கொண்டிருக்கும் அபிப்ராயம் இன்னதென்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்றும் நோக்கங்கொண்டு இந்த நிருபத்தை எழுதலானோம்.

சிறிது காலமாக இந்தியாவின் எந்தப் பாகத்திலும் அந்நிய நாட்டுத் துணியை வாங்கக்கூடாதென்றும் நமது நாட்டுத் துணியையே உபயோகப்படுத்த வேண்டுமென்றும் ஜனங்கள் முயற்சி யெடுப்பதனால் சகல ஜாதிக்காரரும் நெசவுத் தொழிலையே பிரதானமாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். அநேகவிடங்களில் யந்திரத்தறி வைத்து நெய்கிறார்கள். கைத்தறியில் ஒருநாள் முழுவதும் ஒருவன் 7 கஜம் துணிதான் நெய்ய முடியும். யந்திரத்தறியிலோ நாள் ஒன்றுக்கு 70 கஜம் நெய்ய முடியும். அவ்விதம் அதிகமாக நெய்து அந்தத் துணியைக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். நம்மவர்கள் கைத்தறியில் நாள் ஒன்றுக்கு 7 கஜம் நெய்து அந்த யந்திர நெசவுத் துணியின் விலைக்குக் கொடுத்தால் லாபம் ஏதாவது கிடைக்குமா? அதனால் நம்மவர்களது துணியை விலை யதிகமாய்ச் சொல்லவேண்டியிருக்கிறது. ஜனங்களோ யந்திரத்தறியில் நெய்யப்பட்ட சரசமான துணியையே உபயோகிக்கிறார்கள். ஆகவே நம்மவர்கள் தங்கள் துணியை விற்கவியலாது பிழைப்புக்குத் திண்டாடுகிறார்கள்.

நம்மவர்களும் ஆங்காங்கே யந்திரத்தறிகளமைத்து அவற்றைக் கொண்டு அதிகமாய் நெய்து சரசமாய் விற்றால் நம்முடைய துணிகளும் விலையாகும். ஆனால் அப்படி யந்திரத்தறி யமைப்பதற்கு நம்மவர்களிடம் தனித்தனியே போதுமான பணம் இல்லாததனால் ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்திப் பங்குகள் சேர்த்து அவற்றினுதவியால் யந்திரத்தறிகளை அமைக்கலாம். மதுரைமாநகரிலுள்ள பட்டு நூற்காரரென்னும் சௌராஷ்டிரர் ஒரு பொதுநிதி ஏற்படுத்தித் தங்கள் ஜாதியிலுள்ள சில அறிவாளிகளை மேனாடுகளுக்கு அனுப்பிச் சகல விதமான சாயங்களையும் போடக் கற்றுக்கொண்டார்கள். அதன் மூலமாய் அவர்களில் அநேகர் ஐசுவரியவான்களானார்கள். இன்னும் வேறு சில நூதனமான முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்களுடைய பொது நிதியிலிருந்து செலவுக்குக் கொடுத்து இப்போதும் அவர்களில் சிலரை மேனாடுகட்கு அனுப்பி யிருக்கிறதாகத் தெரிகிறது.

சமூக முன்னேற்றம் சமூக முன்னேற்றம் என்று பிரலாபிப்பதில் பிரயோசன மென்ன? ஒரு ஜாதியாரில் பெருந்தொகையான ஐசுவரியவான்கள் இருந்தால் மாத்திரமே அந்த ஜாதி முன்னேற்றமடைந்ததாகக் கருதப்படும். அதனால் நம்மவர்கள் அதிகமாய்ப் பொருள் சம்பாதிக்க வேண்டிய வழியின்னதென்று கண்டுபிடித்து அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டியது நமது தலைச் சங்கத்தாரைச் சேர்ந்த கடமையா யிருக்கிறது.

நம்மவர்கள் தரித்திரக் குழியில் அமிழ்ந்திருப்பதாலேயே அநேகர் நமது செங்குந்த மித்திரனுக்குச் சந்தாத் தொகை செலுத்த வியலாம லிருக்கிறார்கள் என்பது பிரத்தியட்சமாய்த் தெரிந்த விஷயம். நம்மவர்களுக்கு மிகுதியான பொருள் வரும்படியிருக்கும் பட்சத்தில் அவர்கள் இந்தச் செங்குந்த மித்திரன் மாத்திரமல்ல, நம்மவர்களின் பொது நன்மைக்கான இன்னும் எத்தனையோ காரியங்களுக்குத் தாராளமாய் வழங்குவார்கள் என்பது திண்ணம்.

நம்மவர்கள் உயர்தரக் கல்வி கற்று மேலான உத்தியோகங்கள் வகித்தால் அதன் மூலமாய் நமது சமூகம் முன்னேற்றமடையும்என்று நாங்கள் முன்பு நம்பி யிருந்தோம். ஆனால், சிபார்சுகளும் பெரிய உத்தியோகஸ்தர்களது ஆதரவுமே முக்கியமாயிருக்கும் இக்காலத்தில் அத்தகைய நம்பிக்கை நெகிழ்ந்துவிட்டது. மேலும் ஸர்விஸஸ் கமிஷன் என்னும் முட்டுக்கட்டை அந்நம்பிக்கையை அடியோடு முறித்துவிட்டது. மிகவும் கஷ்டப்பட்டு உயர்தரக் கல்வியில் தேர்ந்துள்ள நம்மவர் சிலரும் தற்போது வேலையின்றி வருந்திக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் கல்வியே கற்கலாகாது என்று நாங்கள் அபிப்பிராயப்பட்டதாக நினைக்க வேண்டாம். கல்வியில் நாட்டமுடைய பிள்ளைகள் மட்டும் அவ்வழியில் முயன்று S. S. L. C. வகுப்பு வரையும் படித்தால் போதுமெனவே எண்ணுகிறோம். அந்தக் கல்வியின் அறிவைக் கொண்டே நமது தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய சாதனங்களைச் செய்து கொள்ளலாம். அவ்வாறு படிப்பதற்கு அந்தப் பிள்ளைகளின் பெற்றோரே செலவு செய்துகொள்ளுவார்கள். அவர்களுக்கு நமது தலைச்சங்கத்தின் நிதியிலிருந்து உதவிசெய்ய வேண்டியதுமில்லை. ஆகவே, நம்மவரது தொழிலபிவிருத்திக்கான ஏற்பாடுகளைச் செய்வதே அத்தியாவசியமாகும். அதற்காக ஒரு பெரு நிதி திரட்டி அதன் உதவியைச்

கொண்டு கூர்ந்த அறிவுள்ள வாலிபர் சிலரை மேனுடுகட் கனுப்பிச் சாயமேற்றல் முதலிய சிறந்த வழிகளில் பயிலச் செய்து அவர்கள் மூலம் நூதனமான முறைகளை நம்மவரனைவரும் கற்று நமது தொழிலிற் கையாள வேண்டும்.

அன்றியும் இப்போது நம்மவர்களது துணிகள் எளிதில் விற்பனையாகாமையால் ஏழை நெசவாளர்கள் அந்தத் துணிகளைத் தலையில் சுமந்துகொண்டு தெருத்தெருவாய் அலைந்து திரிந்து கேட்ட விலைக்கு விற்பனை செய்யும் பரிதாபக் காட்சியைக் காண்போர் மனம் சகியார். இக்குறையை நிவர்த்திப்பதற்காக ஆங்காங்கே நமக்குள் கூட்டுறவுச் சங்கங்களிருக்குமாயின் அந்த நிதியிலேயே அந்தத் துணிகளைக் கிரயத்துக்கு வாங்கிக்கொண்டால் நம்மவர்கள் அலைந்து திரிந்து விற்பனை செய்கிற இடுக்கண் ஒரு வகையாய் நிவர்த்தியாகுமென்றும் நம்முடைய புடவைகள் இப்போது பினங்கு, சிங்கபூர், ரங்கூன், மோல்மன், மோரீஸ் முதலிய தீவுகளுக்குச் செல்லக்கூடியவையா யிருப்பதால் நமது கூட்டுறவுச் சங்கத்தார் நம்மவர்களிடம் வாங்குகிற ஜவுளிகளை மொத்தமாய் அந்தந்தத் தீவுகளுக்கு ஆள் மூலமாக அனுப்பி விற்பனை செய்ய ஏதுவாயிருக்குமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

இந்த விருபத்தைப்பற்றி பற்பல விடங்களிலிருக்கும் செங்குந்தர்களும் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிடுவரென நம்புகிறோம்.

இங்ஙனம் : திருநெல்வேலி டவுன்
பெரிய தெரு செங்குந்தர்கள்

---

## தேர்தல் வெற்றி

புளியங்குடி போஸ்டு சிந்தாமணி கிராமம் பஞ்சாயத்து கோர்டில் காலியான 5 மெம்பர் ஸ்தானங்கட்கு 7-11-32-ல் நடந்த எலெக்ஷனில் போட்டி பலமானதாக இருந்தாலும் நம்மவர்களான உயர்திரு. பா. நயினர் முதலியாரவர்களும், கு. ம. கந்தசாமி முதலியாரவர்களும், V. சுப்பையா முதலியாரவர்களும் மெஜாரிட்டி ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புளியங்குடி போஸ்டு சிந்தாமணி கிராமம் பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டு ஸ்தானத்துக்கு 29-2-32உ நடந்த எலெக்ஷனில் சிந்தாமணி கிராமம் ஐக்கிய நாணய சங்கத்தின் மாஜி செக்ரெட்டரியும், திருநெல்வேலி ஜில்லாபாங்கின் டைரெக்டரும் பிரபல நூல் வியாபாரியும், செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் மாஜி பிரசிடெண்டுமான உயர்திருவாளர் கி. வ. கோட்டியப்ப முதலியாரவர்கள் போட்டியின்றி ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

---

## அநுதாபம்

திருநெல்வேலி ஜில்லாவில் பிறந்து வளர்ந்து இந்நகருக்கு வந்து எங்களுக்கு நற்புத்தி புகட்டி ஜீவகாருண்யத்தை நிலைநாட்டி உயிர்ப்பலி செய்வதைத் தடுத்து அநேகரைச் சைவர்களாக்கி ஏழை மக்களுக்கு இரங்கிப் பிணியகற்ற தர்ம வைத்திய சாலையை ஸ்தாபித்து நடாத்தி வருபவரான முருகானந்த வைத்தியசாலை அதிபர் திரு. S. P. V. P. வால சுப்பிரமணிய முதலியாரவர்களது ஏகபுத்திரி திரு. ம. தி. தெய்வகுஞ்சரி அம்மாள் 17-4-32 தேதி ஆதிவாரத்தன்று சிவசாயுச்ய பதவி அடைந்தமை கேட்டு மனம் வருந்துகின்றோம். டை வைத்தியசாலை அதிபருக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் எமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

செங்குந்த மகாஜன சங்கத்தார், தேவகோட்டை.

---

## கதர் உற்பத்தி ஸ்டோர்

(வடசித்தூர், பொள்ளாச்சி தாலுகா)

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே !

ஏழைகள் பசிப்பிணியைத் தீர்ப்பதற்குக் குடிசைத்தொழிலாகிய கதரே சிறந்த ஔஷதம் என்பதுணர்ந்து நமது தாலுகாவில் உற்பத்தி செய்யும் காதி வஸ்திரங்களையும் நூல்களையும் வாங்கி உபயோகப்படுத்தி ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். நற்சாக்ஷிப்பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம்.

---

## தமிழ் நாட்டுப் பலசாலிகள் 2-வது மகாநாடு

### செட்டி நாடு

இம் மகாநாடு கீழச்சிவற்பட்டி-அழகாபுரி, உடற்பயிற்சி சாலையின் சார்பாக செட்டி நாடு ரயில்வே ஸ்டேஷனுக் கெதிரிலுள்ள ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரவர்கள் கிரௌண்டில் நடைபெறும். பெங்களூர் உடற்பயிற்சி நிபுணரும், பலசாலியுமான புரொபெஸர் கே. வி. அய்யரவர்கள் தலைமை வகிக்க இசைந்துள்ளார்கள். நிகழ்ச்சிக் குறிப்புகள் சீக்கிரம் வெளிவரும்.

அழ. சுவாமிநாதன் செட்டியார்,
காரியதரிசி.

---

## தேவகோட்டை

### ஸ்ரீமுருகானந்த வைத்திய சாலை

### தர்மநிதி பிரைஸ் சீட்டு

குறிப்பிட்ட காலத்தில் புத்தகங்கள் விற்பனையாகி வாரமையால் சீட்டு குலுக்கும் தேதி 30-8-32 ஆக மாற்றி வைக்கப்பட்டிருக்கிறது.

---



## சங்கரநயினர் கோயில் செங்குந்த சகோதரர்கட்குச் சிறந்த வேண்டுகோள்!

கவனியுங்கள் ! கவனியுங்கள் !! கவனியுங்கள் !!!

“ இன்றே செய்யின் என்றும் நன்மையே ”

எல்லாரும் செல்வ வாழ்வடையச்

# சி ற ந் த வ ழி

அன்பார்ந்த சகோதரர்களே !

இவ்வுலகில் மற்ற ஜாதியாரோடு நமது ஜாதியையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்பொழுது உங்கள் கண்களுக்கு மற்றவர்களது உயர்ந்த வாழ்வும், நமது கொடிய தரித்திர நிலைமையும், தாழ்வும், கோழைத்தனமும், நாம் முன்னேற்றமடையாமல் பின்னணியிலேயே நிற்பதும் நன்கு புலப்படும். இன்னும் இப்படிப்பட்ட தாழ்ந்த நிலைமையைப் போக்காதிருந்தோமானால் அதிவிரைவில் நமது சமூகமே தரித்திரக் கடலில் அழுந்த நேரிடும். ஆகையால் இதுவரை தூங்கிக்கொண்டிருந்த நாம் இப்பொழுதாவது விழிப்போமாக!

“இல்லாரை எல்லாரும் எள்ளுவர்
செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு”

ஆகையால் இவ்வூரில் பெருந்தொகையினராக வாழும் சிறந்த கைத்தொழிலாளிகளான நமது ஜாதியார் தமது கைத்தொழிலில் நாள் 1-க்கு 5-அணா கூலிகூடக் கிடையாமல் பெருங்குடும்பங்களை வைத்துக்கொண்டு படுங் கஷ்டமோ சொல்லத் தொலையாதபடி யிருக்கிறது. கொடிய தரித்திர நோய் நமது ரத்தத்தை உறிஞ்சிப் பலத்தைக் குறைத்து எலும்புந் தோலுமாக்கி மிகுந்த கோழைத்தனத்தை புண்டுபண்ணிப் பலவிதத்திலும் வாட்டி வருத்துகிறது. இது யாவரு மறிந்ததே. இக்குறையை நீக்க இதுவரை ஒருவரும் வெளி வாராதிருந்தது நமது பாவத்தின் பலனு யிருக்கலாம். இப்பொழுதாவது கண் விழியுங்கள். கீழே காட்டும் முறையைக் கடைப்பிடியுங்கள். தரித்திரம் நீங்கித் தகுந்த செல்வ வாழ்வைப் பெறுவீர்கள். நம்மிடம் ஒற்றுமை யொன்றே சிறந்த வெற்றி கொடுப்பதால் யாவரும் ஒற்றுமையாகக் கீழ்க்கண்ட முறையைக் கையாளுங்கள்.

நாட்டுக்கோட்டையார் செல்வவான்களாக வாழ்வதற்கு நாம் கையாளப்போகும் முறையே காரணம் என்பதை நன்கு கவனியுங்கள். அதாவது நமது ஜாதியாரில் ஒரு வீட்டில் ஆணாவது பெண்ணாவது பிறந்தால் அக்குழந்தை தரித்திரமின்றிச் சுகமாக வாழ்வதற்காக நமது குடும்பத்தார் ஒவ்வொருவரும் குடும்பம் 1-க்கு 4-அணா வீதம் அக்குழந்தைக்கு உதவித் தொகை கட்டவேண்டியதவசியம். அவ்வாறு செலுத்தப்படும் மொத்தத் தொகையை அக்குழந்தை மேஜராகும் வரை அதாவது 18-வயது வரை நமது ஜாதியாரால் தெரிந்தெடுக்கப்படும் சங்கத்தில் வட்டிக்குப் போட்டுவிடவேண்டும். பின்பு மேஜரானவுடன் அந்தத் தொகையை வட்டியும் முதலும்சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

பின்னும் நமது ஜாதியார் நெசவு செய்கின்ற ஆடைகளை அவரவர்கள் விரும்புகின்றபடி நெசவு செய்பவரிடமும், விலைக்குப் பெற்றுக்கொள்பவரிடமும் அரை அணா கமிஷன் வாங்கிக்கொண்டு விற்று முதல் செய்து கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால் நமது தொழிலாளிகளது கஷ்டஜீவனம் நீங்கும். எல்லாருக்கும் நல்ல கூலி கிடைப்பதோடு எல்லா ஆடைகளும் யாதொரு தடையின்றி விற்று முதல் செய்தும் கொடுக்கப்படும். அப்பொழுது வேலையில்லை யென்றும், கூலி கட்டவில்லை யென்றும் சொல்லும் குறையும் நீங்கிவிடும்.

இதன் மூலம் நமது சங்கத்தில் லாப ஏட்டில் இருக்கும் பணத்தைக் கொண்டு நமது குழந்தைகளுக்குக் கல்வி கைத்தொழில் வியாபாரம் முதலிய விஷயங்களுக்குத் தகுந்த உதவியும் செய்ய இயலும். இன்னும் நமது குழந்தைகளின் பேரால் சங்கத்திலிருக்கும் பணத்தைத் தக்க ஆதாரத்தின் பேரில் நரிகள் வைக்கவும், வீடு கட்டவும், வியாபாரம் முதலானவை செய்யவும் குறைந்த வட்டிக்குக் கொடுத்து உதவியும் செய்து வரலாம். இப்படிச் செய்து வந்தோமானால் சமூகத்தில் தரித்திரமானது தலைகாட்டாமல் பறந்தோடிவிடும் என்பது யாவரும் நன்கறிந்ததே.

இவ்விஷயமானது ஒருவருக்கும் தோஷமில்லாமல் நன்மை புண்டு பண்ணுவதால் நமது செங்குந்தச் செல்வர்கள்எல்லோரும் ஒன்று சேர்ந்து பெருங் கூட்டம் கூடி மேற்கண்ட முறைகளை ஜனங்களுக்கு விளங்க எடுத்துரைத்து யூனியன் பஞ்சாயத்துச் சபையைப்போலச் சபையொன்று ஸ்தாபித்துச் சமூக முன்னேற்றத்திற்கு வேண்டிய சகல காரியங்களையும் மிகுந்த ஊக்கத்தோடு செய்யும்படி மிகுந்த அன்போடு வேண்டிக்கொள்கிறோம்.

சங்கரன்கோவில் } செங்குந்தர் அபிவிருத்தி
28—2—32 } சங்கத்தார்.

58908

# கிளர்ச்சி

## செங்கற்பட்டு ஜில்லா

### காஞ்சீபுரம் அய்யங்கார் பாளையம் செங்குந்தர் சத்தியநெறி இளைஞர் சங்கம்

ஷை சங்க ஆதரவின்கீழ் 20-2-32 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு ஓர் பொதுக் கூட்டம், திருவினர் A. பெருமாள் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் திரு. மு. மாணிக்கம் திரு. R. வீரபத்திரன் திரு. M. கோவிந்தராஜன் அவர்கள் முறையே "செய்நன்றி மறவாமை", "மாதர் முன்னேற்றம்" "கோகினூர் வயிரம்" என்பவை பற்றிப் பேசினார்கள்.

27-2-32-ல் திரு. A. R. வரதராஜ முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், மதுவிலக்கு, சகோதர அன்பு முதலியவைகளைப் பற்றி முறையே திருவினர்கள் M. கோவிந்தராஜன் A. பெருமாள் அவர்கள் பேசினார்கள்.

19-3-32-ல் நடந்த பொதுக் கூட்டத்தில், திரு. C. G. குப்புசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில், மு. மாணிக்கம் என்பவர், "கற்றவரை யொருநாளும் பழிக்க வேண்டாம்" என்பதைப்பற்றியும், திரு. A. பெருமாள் அவர்கள் "கல்வி" என்பது பற்றியும் திரு. R. வீரபத்திரன் அவர்கள், "வர்த்தமானப் பத்திரிகைகள்" என்ற தலைப்பில், அவைகளின் அவசியத்தைப்பற்றியும், அவைகளுக்கு வேண்டிய ஆகாயத் தந்திகள் அச்சயந்திரப் பொறிகள், இவைகளின் உபயோகத்தைப்பற்றியும் தெளிவுற சொற்பொழி வாற்றிய பிறகு S. கண்ணப்பன் அவர்கள் நட்பு என்பதுபற்றிச் சொற்பொழி வாற்றினார். தலைவர் மேற்கண்ட விஷயங்களைப்பற்றித் தெளிவுற விளக்கியதும், இரவு 9-மணிக்கு வந்தன உபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

26-3-32-ல் திருவினர் A. பெருமாள் அவர்கள் தலைமையின்கீழ் நடந்த கூட்டத்தில் மாதர் முன்னேற்றம் என்பதுபற்றித் திரு. M. கோவிந்தராஜன் அவர்களும், "போது மென்ற மனமே பொன் செய்யுமருந்து" என்பதுபற்றித் திருவினர் R. வீரபத்திரன் அவர்களும் பேசிய பிறகு தலைவர் மேற்கண்ட விஷயங்களைப்பற்றிப் பேசினார். பிறகு கூட்டம் சுமார் $8\frac{3}{4}$ மணிக்கு இனிது நிறைவேறியது.

### நிருவாக சபைக் கூட்டங்கள்

7-2-32-லும் 12-3-32-லும் திரு. M. அன்னப்ப முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டங்களில் சிற்சில தீர்மானங்கள் நிறைவேறின.

---

## செங்குந்த குலசீர்திருத்தப் பிரசாரம்

8-5-32 இரவு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரசாரகராகிய திருவாளர் P. C. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் காஞ்சிபுரத்தினின்றும் புறப்பட்டு 4௳ அசனம்மா பேட்டை வந்து சேர்ந்தார். அன்று அங்குள்ள சில சந்தா பாக்கிகளை வசூல் செய்தார். மறுநாள் மாலை 6 மணிக்கு அசனம்மாபேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவில் புதுப்பேட்டையிலுள்ள விநாயக ராலயத்தில் ஓர் கூட்டம் கூட்டப்பட்டது. அதுபோது செங்குந்த குலமக்கள் திரளாகக்குழுமி யிருந்தார்கள். கூட்டத்திற்கு பிரசாரகர் அவர்கள் தலைமை வகித்தார்கள். கடவுள் வணக்கம் முடிந்ததும் தோழர்களான சேயாறு போர்டு ஹைஸ்கூல் மாணவர்கள் K. கணபதி, M. பச்சையப்பன், M. P. சிதம்பரம் ஆகியோர் கல்வி, பெண் கல்வி, விடாமுயற்சி என்பனவற்றைப் பற்றியும் அசனம்மாபேட்டை திரு. S. சுந்தரன் அவர்கள் 'நமது நிலைமையும் முன்னேற்றமும்' என்பதைப்பற்றியும் அசனம்மாபேட்டை ஆசிரியர் திருமிகு V. ஆரிமுத்து அவர்கள் 'நமது கலியாணம்' என்பதைப்பற்றியும் முறையே பேசினார்கள். தலைவர் அவர்களின் விரிந்த முடிவுரைக்குப் பிறகு வந்தனோபசாரத்துடன் இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

பிரசாரகர் 7-5-32 காலை புறப்பட்டுச் சித்தாத்தூருக்குச் சென்று அங்குள்ள சந்தா பாக்கிகளை வசூல் செய்து கொண்டு மறுநாட் காலை அசனம்மா பேட்டை வந்து சேர்ந்தார்.

9-5-32 அன்று திருவாளர்கள் V. ஆரிமுத்து முதலியார், S. சுந்தரன் ஆகியவர்களுடன் கலவை நகர் சென்றார். அங்கே திரு. அருணகிரி முதலான வாலிபர்கள் மிக அன்புடன் வரவேற்றுபசரித்தது பாராட்டத் தக்கதாகும். அன்று மாலை $8\frac{1}{2}$ மணிக்குச் செங்குந்தர்கள் மடத்தில் சுந்தர விநாயகர் செங்குந்தர் சங்கக் கூட்டம் பிரசாரகர் அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. திரு. S. சுந்தரன் அவர்கள் நமது முன்னோர்களும் நாமும் என்பதைப்பற்றியும் திருவாளர் V. ஆரிமுத்து முதலியார் அவர்கள் செல்வமும் செலவும் என்பது பற்றியும் பேசினார்கள். புராணிகர்களான திரு. பாலசுந்தர முதலியார், திரு. வடிவேல் முதலியார் ஆகியோர்களும் மேற்கண்ட விஷயத்தைத் தழுவிப் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடன் இரவு $11\frac{1}{4}$ மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

10-5-32 காலை சந்தா பாக்கிகளை வசூல் செய்து கொண்டு பகல் 1 மணிக்கு அசனம்மாபேட்டை வந்து சேர்ந்தார் 11-5-32 அசனம்மாபேட்டையினின்று புறப்பட்டுத் திருவோத்தூர் சென்றார் அங்கு நின்றும் புறப்பட்டுத் திருவத்திபுரம், அம்மையப்பட்டு, தென்னாறு, கொடுங்காலூர், வெடால், குண்ணகம்பூண்டி, நெடுங்குன்றம், தேவிகாபுரம், வாழைப்பந்தல் முதலிய இடங்களுக்குச் சென்று பிரசாரம் செய்து நங்குல மக்களிடைய உற்சாகத்தையும் சீர்திருத்த உணர்ச்சியையும் எழுப்பினார்.

---



## வட ஆற்காடு

### கலவை

### ஸ்ரீ சுந்தரவிநாயகர் செங்குந்தர் சங்கம்

23-1-32 அன்று மாலை $6\frac{1}{2}$ மணிக்குமேல் ஸ்ரீ சுந்தர விநாயகர் செங்குந்த சங்கத்தின் ஆதரவில் செங்குந்தர் பொது மடத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அசனம்மா பேட்டை திரு. V. ஆரிமுத்து முதலியாரவர்கள் தலைமை வகித்தார். தலைவர் "ஆண்டு விழாவும் அதன் அவசியமும்" என்பதைப்பற்றி மிக விரிவாக எடுத்துக் கூறினார். பிறகு அதே விஷயத்தைப் பின்பற்றித் திருவாளர்கள் த. பரசுராம முதலியார், N. வடிவேலு முதலியார் ஆகியவர்கள் விமரிசையாகப் பேசினார்கள். பின்னர் சங்கத்தலைவர் அ. சு. சின்னசாமி முதலியார் உபந்நியாசகர்கள் ஒவ்வொருவரையும் பின்பற்றிப் பேசினார். பிறகு ஸ்ரீ சுந்தர விநாயகர் செங்குந்தர் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா நடத்த வேண்டுமெனவும், அவரவர்களிடமிருந்து ஆண்டு விழாவிற்கு நன்கொடைத் தொகை கையொப்பம் வாங்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் இரவு $10\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் முடிவு பெற்றது.

28-2-32-ல் செங்குந்தர் பொது மடத்தில் ஷை சங்கத்தின் பொதுக் கூட்டம் உயர்திரு. சு. சுப்பராய முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் முன்னுரைக்குப் பின் அசனம்மா பேட்டை திருவாளர் V. ஆரிமுத்து முதலியார் ஒற்றுமை என்பதைப்பற்றியும் ஷை ஊர் K. சிதம்பர முதலியார் விடாமுயற்சி என்பதைப்பற்றியும், திரு. N. D. பாலசுந்திர முதலியார் 'ஆண்டு விழாவும் அதன் அவசியமும்' என்பதைப்பற்றி மிக விரிவாகப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

5-4-32 மாலை 8-மணிக்குச் செங்குந்தர் பொது மடத்தில் சங்கத்தின் தலைவர் அவர்களின் வேண்டுகோளின்படி காஞ்சிபுரம் கர்ப்பக வள்ளலார் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க தேசிகரவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் தலைவர் முகவுரைக்குப் பின் திரு. ரங்கநாதன், திரு. N. வடிவேலு முதலியார் ஆகியோர் முறையே 'பொய் சொல்லாமை, விநாயகர் பெருமை, குருபக்தி' என்பவைபற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரையில் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் நீண்ட சொற்பெருக்கு நிகழ்த்தினார். பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 11-மணிக்கு இனிது கலைந்தது.

### அசனம்மாபேட்டை செங்குந்த வாலிபர் அபிவிருத்தி சங்கம்

3-4-32 இரவு 9 மணிக்கு நடுத்தெருவிலுள்ள பஜனை மடத்தில் தலைச்சங்கப் பிரசாரகர் திருவாளர் தி. அ. சண்முக முதலியாரவர்களால் "விருத்த குமார பாலரான படலம்" மிக விமரிசையாகப் பிரசங்கிக்கப் பெற்றது. பிரசங்கிக்கு முகத்தான் நம்மவர்க்கு வேண்டிய பல அரிய போதனைகளையும் ஊடே ஊடே கூறிப் போந்தமை அனைவர்க்கும் பெரியதோர் ஊக்கத்தை யுண்டாக்கிற்று. இரவு 12 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

4-4-32 தேதி இரவு 9 மணிக்கு மீண்டும் திருவாளர் கா. தாண்டவராய முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் தலைச்சங்கப் பிரசாரகர்கள் திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்களும், தி. அ. சண்முக முதலியாரவர்களும் முறையே, "சைவம்" "சங்கம்" என்பவைபற்றி நீண்ட உபந்நியாசங்கள் செய்த பின், காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க தேசிகர் அவர்கள் மேற்படி உபந்நியாசங்களைத் தழுவித் தமது சுற்றுப் பிரயாணத்திற் கண்டறிந்த பல செங்குந்தர்களின் நிலைமையையும் அவர்கள் முன்னேறும் விதத்தையும் வெகு அழகாக எடுத்துரைத்தார்கள். வந்தனோபசாரத்துடன் இரவு 11-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

### அசனம்மா பேட்டை செங்குந்த இளைஞர் கழகம்

5-4-32 இரவு 7-மணிக்குத் திருவாளர் V. ஆரிமுத்து முதலியாரவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய கூட்டத்தில் திரு. S. சுந்தரன் அவர்கள் சங்கத்தின் அவசியம் என்பதைப்பற்றிப் பேசினார். தலைவர் முடிவுரை கூறியபின் மறுநாள் கழகத்திற்குத் தலைச்சங்கப் பிரசாரகர்களை விரிவுரை நிகழ்த்த அழைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

6-4-32 மாலை 6-மணிக்கே தலைச்சங்கப் பிரசாரகர்கள் கழகம் கூடுமிடமாகிய பஞ்சாயத்துப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கூட்டத்திற்குப் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. S. சுந்தரன் "நமது முன்னேற்றம்" என்பதுபற்றிப் பேசிய பின் திருவாளர் தி. அ. சண்முக முதலியார் அவர்கள் "இளைஞர் இயக்கம்" என்பதுபற்றி ஒரு விரிவுரை நிகழ்த்த, முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் இரவு 11-மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

---

## தென்னாற்காடு

### கண்டாச்சிபுரம்

5-2-32 இரவு 8-மணிக்குக் க. பொ. இராஜமாணிக்க முதலியார் தலைமையிற் கூடிய கூட்டத்தில் தலைச்சங்கப் பிரசாரகர் சைவசித்தாந்த தமிழ்ப் புலவர் ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் "மகாநாட்டு வைபவம்" என்பது பற்றி இன்னிசைக் கரு

விகளுடன் நீண்டதோர் சொற்பொழிவாற்றியபின் 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### செங்நேற்குணம்

10-2-32 இரவு 8-மணிக்கு அ. கருப்ப முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் பிரசாரகர் "மணிவாசகனுர் மாண்பு" என்பது பற்றியும் முன்னேற்றம், வீரம், கருணை, ஒற்றுமை, அறம் முதலியவை பற்றியும் மிக்க திறமையுடன் பேசி முடித்த பின் இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### கலியாணம்பூண்டி

16-2-32 காலை 9 மணிக்குப் பொன். மு. வெ. முனிசாமி முதலியார் அவர்கள் முன்னுரையில் "வீரவாகுதேவர் விஜயம்" என்பது பற்றியும் பின் பிரசாரகர் "சமூக முன்னேற்றம்" என்பது பற்றியும் சுமார் 2 மணி நேரம் பேசியபின் கூட்டம் முடிந்தது.

### பொன் பரப்பி

27-2-32 இரவு 9 மணிக்கு போர்டு பாடசாலையில் R. இரத்தினம்பிள்ளை அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் குவாகம், ந. சு. பெரியபிள்ளை முதலியார் அவர்கள் 'நட்பு முறை, புலமைப் பெருமை, கவி நயம்' முதலியன பற்றிப் பேசிய பின், சங்கப் பிரசாரகர் "சமூகமுன்னேற்றமும் வள்ளியம்மை திருமணமும்" என்னுஞ் சொற்பொழிவாற்றியபின் இரவு 1 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### சிறுகளத்தூர்

1-3-32 இரவு 7 மணிக்குத் தாகு வீ. ராமசாமி முதலியார் தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் சங்கப் பிரசாரகர் 'வீரவாகு தேவர் விஜயம்' என்பது பற்றிச் சுமார் 3-மணி நேரம் பேசிய பின் ஆனந்த கோஷ்டத்திடையே கூட்டம் இனிது கலைந்தது.

### குவாகம்

6-8-32 இரவு 8 மணிக்குத் திரு. வேங்கிடசாமி வாண்டையார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய பொதுக்கூட்டத்தில் நமது சங்கப் பிரசாரகர் 'வள்ளியம்மைத் திருமணமும் நம்மவர் தமிழ் வளனும்' என்பீது பற்றிப் பேசியபின் திரு. V. A. கலியாணசுந்தர ஐயர் அவர்களும், V. ஷண்முகம் பிள்ளை அவர்களும் ந. சு. பெரியபிள்ளை முதலியார் அவர்களும் முறையே 'கல்வி', 'சுகாதாரம்' 'பொருடளைப் போற்றி வாழ்' என்னும் விஷயங்களைப் பேசிய பின் வந்தனோபசாரத்துடனும் பிரசாத விநியோகத்துடனும் கூட்டம் 1 மணிக்கு இனிது கலைந்தது.

### வாரியங்காவல்

7-8-32 இரவு 8 மணிக்குத் துரைசாமி முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் நமது சங்கப் பிரசாரகர் "செங்குந்தர் சரித்திரம், வீரவாகுதேவர் விஜயம்" என்பவைபற்றிச் சொற்சுவை பொருட்சுவை சொட்டுமாறு ஆழ்ந்த கருத்துடன் சுமார் 5 மணி நேரம் பேசிய பின் மித்திரனை ஆதரித்தல், கிளைச்சங்கம் ஸ்தாபித்தல், சுபாசுபங்களில் நன்கொடை ஈதல், ஆண் பெண்களுக்கு அவசிய கல்வி கற்பித்தல், மதுபானம், பலிபூசை நீக்கல் ஆகிய 5 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடனும் பிரசாத விநியோகத்துடனும் கூட்டம் இனிது முடிந்தது.

### கடலூர்

13-4-32 இரவு 8 மணிக்கு ஸ்ரீகுமார கோவிலில் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் நமது சங்கப் பிரசாரகர் ச. கா. குமரகுரு முதலியார் அவர்கள் 'ஸ்ரீபஞ்சாக்கரத்தின் பண்பு, சிவதரிசனபலன், இசையின் மாட்சி, தேவார திருவாசகப் பெருமை, திருஞான சம்பந்தர் திறன், செங்குந்தர் செயல், ஜீவகாருண்யம்' என்பவைபற்றி 3-மணி நேரம் பேசிய பின் 11-மணிக்குத் தேவார பஜனையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

## தஞ்சை ஜில்லா

### வலங்கைமான் செங்குந்தர் சங்கத் திறப்பு விழா

18-3-32 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில் திருவாளர் V. இரத்தின முதலியார் பி.ஏ., பி.எல். அவர்கள் சமூக சங்கத்தின் அவசியத்தையும் அதனுலேற்படும் நன்மைகளையும் தெளிவாக எடுத்துக் கூறி மேற்படி சங்கத்தினைத் திறந்து வைத்தார். பின்னர் திரு. G. S. கந்தசாமி முதலியார், திரு. சாமிநாதய்யர் முதலியோர் செங்குந்தர் முன்னேற்றமடைய வேண்டிய வழிகளைக் குறித்துப் பேசினர். தலைவர் முடிவுரைக்கும் வந்தனோபசாரத்துக்கும் பின்னர் இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது. அது சமயம் பல கனவான்கள் மேற்படி சங்கத்துக்கு நன்கொடை வழங்கினர்.

---

## திருச்சி ஜில்லா

### கோடுக்கூர்

2-3-32 இரவு S. V. தெண்டபாணி அய்யர் தலைமையின் கீழ்க் கூடிய கூட்டத்தில் 'அவசிய கல்வி' என்பதைப்பற்றி T. K. கனகரத்தினம் என்பவரும், 'சுகாதாரம்' என்பதைப்பற்றி S. S. துரைசாமி முதலியார் என்பவரும் உபந்நியாசம் செய்த பிறகு பிரசாரகர் நந்தனுர் சரித்திரத்தை உபந்நியாசம் செய்தார். தலைவர் தமது பின்னுரையில் பக்தியையும் அதற்குச் சாதகமான கல்வியையும் பற்றிப் பேசியபின் வந்தனோபசாரத்துடன் சுமார் 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### கல்லாத்தூர்

### செங்குந்த மகாஜனக் கூட்டம்

11-8-82 மாலை 5½-மணிக்குச் சிறுத்தொண்ட நாயனுர் திருமடத்தில் பு. சா. சின்னசாமி அக்கிராசனத்திற் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில், வரவேற்பு அங்கத்தினராகச் செ. வை. நடராஜ முதலியார், பு. அ. சின்னசாமி முதலியாரும், தலைவராக வெ. பா. கந்தசாமி முதலியார் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அப்போது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

1. நமது செங்குந்த மித்திரனை ஒவ்வொரு செங்குந்த குடும்பத்தினரும் ஆதரித்தல் வேண்டும்.
2. நாம் விரைவில் ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபித்துத் தலைச்சங்கத்தோடு இணைக்கவேண்டும்.
3. ஒவ்வொரு குடும்பத்தினரும் ஆண் பெண் இருபாலார்க்கும் 'எண் எழுத்து' என்னும் இரண்டு கண்களையும் திறந்து நலனுறச் செய்யவேண்டும்.
4. சிறு தெய்வங்கட்குப் பலிபூசை யிடுதலும் மது முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்தலும் அறவே யொழிக்கப்படவேண்டும்.
5. கோயில் உற்சவாதிகள், சூர சம்மாரம், தேவார கோஷ்டி முதலியன நடத்தும் முறைகளை நன்கு கவனிக்கவேண்டும்.

பிறகு தலைச்சங்கப் பிரசாரகர் செங்குந்தர் பண்டைப் புகழ், தற்காலம் பத்திரிகை வாசிப்பதின் பயன், மித்திரன் அபிவிருத்தி, தேசவின் அவசியம், கவி நயம், புலவர் பெருமை முதலியன பற்றி 2-மணி நேரம் பேசியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

### ஆண்டி மடம்

13-3-32 பிற்பகல் 5-மணிக்குக் கனம் M. N. K. சிவசிதம்பர முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் தலைவர் முன்னுரைக்குப்பின் நமது சங்கப்பிரசாரகர் ச. கா. குமரகுரு முதலியாரவர்கள், 'செங்குந்தர் பெருமை, வீரம், கருணை, பக்தி, உண்மை, விபூதி ருத்ராக்கம், பஞ்சாக்ஷர செபம்' முதலியவைகளைப் பற்றி நீண்ட சொற்பொழிவாற்றியபின் தலைவர் முடிவுரை கூற, வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

### அகரம்

15-8-32 இரவு 8 மணிக்குத் தெற்குத் தெரு மாரியம்மன் கோவிலுக்கெதிரில் திருவாளர். கா. கு. ராமசாமி முதலியார், கோவாபரேடிவ் சொசைடி பிரஸிடெண்டு அவர்களது தலைமையின் கீழ்க் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் தலைவர் முன்னுரைக்குப்பின் கீழ்க்கண்ட உபந்நியாசங்கள் நடைபெற்றன.

1. புலால் மறுத்தல், அண்ணாமலை முதலியாரவர்கள்; 2. சமூக சேவை (முன்னேற்றம்) கு. ச. மஹாலிங்க முதலியாரவர்கள்; 3. வியாபார ஒற்றுமை, ச. கு. உலகநாத முதலியாரவர்கள்; 4. செங்குந்தரும் ஜீவகாருண்யமும், ச. கா. குமரகுரு முதலியார் அவர்கள், சைவசித்தாந்த தமிழ்ப் புலவர் (பிரசாரகர்)



பின்பு, செங்குந்த மித்திரனுக்கு ஆதரவளித்தல், மக்கட்குக் கல்வி புகட்டல், மதுபானத்தை யொழிக்கப் பாடுபடல், வாலிபர் தீய வழக்கங்களை யொழித்தல் முதலியவைகளைப்பற்றித் தீர்மானங்கள் நிறைவேற, வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

## திரிச்சி ஜில்லா

### திருமழபாடி

27-3-32 இரவு 8 மணிக்கு செ. வ. வைத்தியலிங்க முதலியார் தலைமையில் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் தமிழ்ப்புலவர் ச. கா. குமரகுரு முதலியார் 'செங்குந்தர் தெய்வீகம், குலச்சீர்திருத்தம், நாகரிகம், பண்டைத் தமிழின் மாட்சி, புலாலுண்ணுமை, கள்ளுண்ணுமை, ஒற்றுமை' என்பவைபற்றிப் பேசி முடித்துப் பின் 'திருமழபாடியும் செங்குந்தரும்' என்பது போன்ற சிறப்புக் கூறிய பின் இரவு மணி 11-க்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### புதூர்

23-3-32 இரவு 8 மணிக்குக் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் தலைச்சங்கப் பிரசாரகர் ச. கா. குமரகுரு முதலியாரவர்கள் செங்குந்தர் பெருமை, சீர்திருத்தம், ஒற்றுமை, கல்வி, ஒழுக்கம், ஜீவகாருண்யம், ஈசுரபக்தி முதலியவைகளைப்பற்றிச் சுமார் 3 மணி நேரம் சொற்பொழிவாற்றிய பின் வந்தேனுபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

---

## கோயம்புத்தூர் ஜில்லா

### காரமடை செங்குந்த வாலிபர் சங்கம்

1932௵ மார்ச்சு௴ 80௳ மாலை 9-மணிக்கு மேற்படி சங்கத்தின் 11-வது கூட்டம் ம-ள-ள-ஸ்ரீ க. காணியப்ப முதலியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முகவுரையில் சங்கத்தை ஒற்றுமையுடன் நடத்துமாறு கேட்டுக்கொண்ட பிறகு, 10-வது கூட்டத்து நடவடிக்கை அங்கீகரிக்கப்பட்டது. பின் S. காச்சியப்ப முதலியார் சமீபத்தில் நடந்த ஈரோடு மகாநாட்டைப்பற்றியும் (சங்கத் திறப்பு விழா) A. பழனியப்பன் 'பொறுமை' என்பது பற்றியும் பேசினர். கடைசியாகக் கூட்டம் வந்தனோபசாரத்துடன் இனிதுமுடிந்தது.

### செங்குந்தர் அச்சுக்கூடத் திறப்பு விழா

கோயம்புத்தூர் ஜில்லா செங்குந்த வாலிபர் கழகத்தின் முயற்சியின் பயனாகக் கோயம்புத்தூரில் கூட்டுறவு வர்த்தக ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதற்குச் 'செங்குந்தர் அச்சுக்கூடம் லிமிடெட்' என்று பெயர் கொடுக்கப்பட்டது. அதன் திறப்பு விழா ஆங்கீரஸ௵ சித்திரை௴ முதல்தேதியன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. திருவாளர் திவான் பஹதூர் இரத்தின சபாபதி முதலியாரவர்கள் நல்வார்த்தைகளுடன் அதனைத் திறந்து வைத்தார்.

### சேங்குந்த வாலிபர் சங்கம், ஈரோடு.

## திறப்பு விழா

முன்னேற்றத் துறையில் இவ்வூர்ச் செங்குந்த மக்களை ஈடுபடுத்தி வைப்பதற்காகச் செங்குந்த வாலிபர்கள் ஒரு சங்கத்தை நிறுவி அதன் திறப்பு விழாவைச் சென்ற 27-3-32 அன்று ஞாயிற்றுக் கிழமை திரு. வ. மு. மொட்டையப்ப முதலியார் இல்லத்தில் நடத்தினார்கள்.

இவ்விழாவிற்குக் கொல்லங்கோடு K. முத்துக் குமாரசாமி முதலியாரவர்கள் தலைவராகவும் திறப்பு விழாவை ஆற்றக் கோவை திரு. வா. செ. செங்கோட்டைய முதலியாரவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிகழ்ச்சிக்குறிப்பில் கண்டவாறு தலைவர்கள் ஊர்வலத்திற்குப் பிறகு இவ்விழாவிற்காக அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் சரியாக 10 மணிக்குக் கடவுள் வாழ்த்துக்குப் பிறகு நடவடிக்கை துவக்கப்பட்டது.

தலைவர் தமது முகவுரையில் செங்குந்த வாலிபர்கள் முயற்சியைப் பெரிதும் மெச்சிப் பேசினார்கள். பின்னர் திறப்பு விழாத் தலைவர் சங்கத்தின் அவசியத்தையும் அதன் மூலம் சாதிக்கக் கூடிய காரியங்களையும் ஆடம்பரமின்றிப் பொறுமையுடன் செய்யவேண்டிய முறைகளையும் குறித்துப் பேசி நன்மொழிகளுடன் சங்கத்தைத் திறந்து வைத்தார்.

பின்னர் முறையே திரு. வீ. சென்னியப்ப முதலியார், திரு. E.V. சிங்காரவேல் முதலியார், B.A., பண்டிதர் சிவபாத ஹிருதயம் பிள்ளை, திரு. ஐ. க. பெருமாள்சாமி முதலியார், ஜனமித்திரன் ஆசிரியர் திரு. E. P. வெங்கடாசலம் முதலியவர்கள், 'பெண் கல்வி', 'நம்மவர் சீர்திருத்தம் பெறாதது ஏன்?', 'ஒற்றுமை' என்ற விஷயமாய் விரிவாகப் பேசினர். பின்னர் ஐக்கிய விஷயமாகத் திரு. வ. மு. மொட்டையப்ப முதலியார் உபந்யாசம் செய்த பிறகு தலைவர் முடிவுரையானதும் வந்தனோபசாரத்துடன் ஒரு மணிக்குக் கூட்டம் இனிது முடிவடைந்தது.

---

## இராமனுதபுரம் ஜில்லா

### தேவகோட்டை

ஆங்கீரஸஹு சித்திரைமீ 1௳ புண்ணிய காலக் கொண்டாட்டம் செங்குந்தர் ஷண்முகனுதன் பஜனை மடாலயத்தில் முருகானந்த வைத்திய சாலை அதிபர் திரு. S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியாரவர் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் திரு. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் 'மாணவர் நிலைமை' யென்பது பற்றியும், திரு. கே. கோவிந்த நாயரவர்கள் 'கல்வி கற்கும் முறை' யென்பதுபற்றியும், திரு. V. சண்முகனுத பிள்ளை 'ஏழை மாணவர்கள்' என்பதுபற்றியும் பேசியபின் திரு. தலைவர்கள் கல்வி, சைவம், ஜீவகாருண்யம், நமது கடன்' என்பவைபற்றிப் பேச, வந்தனோபசாரத்துடன் சபை கலைந்தது.

---

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கரநயினார் கோயில்

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

சித்திரைமீ 19௳ இரவு 7 மணிக்கு வக்கீல் ஸ்ரீமான் S. பழனியாண்டி முதலியார் B. A. அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாணவி S. ஆவுடை அம்மாளால் தேவாரம் பாடப்பட்டது. தலைவரவர்கள் முகவுரைக்குப் பின் தஞ்சாவூர் ஸ்ரீமத் ராமாநந்த சுவாமிகள் செங்குந்தர் புராதன பழக்க வழக்கங்கள், முன்னேற்றம், செங்குந்த மித்திரன் முதலியவைகளைக் குறித்து மக்கள் மனதைக் கைக்கொள்ளுமாறு பேசினார்கள். ஸ்ரீமான் M. திருவுடையா முதலியார் அவர்கள் செங்குந்த மித்திரனை ஒவ்வொருவரும் தருவிக்கவும் வாசிக்கவும் வேண்டுமென வற்புறுத்திப் பேசினார்கள்.

தீர்மானங்கள் : நமது குல ஆண் பெண் மக்கள் கல்வி அபிவிருத்தி அடையவேண்டிய ஏற்பாடுகளும் உதவியும் செய்யப் பெரியோர்களை வேண்டிக்கொள்ளல்; புலால் புசித்தலை அறவே யொழித்தல்; செங்குந்த மித்திரனை வீடுகள் தோறும் தருவித்து வாசித்தல்; சங்கத்தில் பல பிரமுகர்களும் ஈடுபட்டு நமது குல முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டிக்கொள்ளல் ஆகிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியபின் தலைவர்கள் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

21௳ இரவு 7 மணிக்குத் தருமர் கோயில் தெருவில் தஞ்சாவூர் ஸ்ரீமத் ராமாநந்த சுவாமிகள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுவாமிகள் முகவுரையாக ஆண் பெண் கல்வியையும், முற்காலத்துச் செங்குந்த சிரோன்மணிகளது பெருமையையும் குல முன்னேற்றத்திற்கேற்ற விஷயங்களையும் குறித்துப் பேசினார்கள். ஸ்ரீமான் M. திருவுடையா முதலியார் அவர்கள் 'சீர்திருத்தம்' என்பதுபற்றிப் பேசினார்கள். மாணவர்கள் S. தருமலிங்கமும், S. சண்முகமும் முறையே கைத்தொழில், ஒற்றுமை என்பவைகளைப் பற்றிப் பேசினார்கள். நடிகர் K. நாகசாமி முதலியாரவர்கள் கீதங்கள் [illegible] முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

158908

## நன்கொடைகள்

1932ஹு ஏப்ரல்மீ 6௳க்குச் சரியான பிரசோற்பத்திஹு பங்குனிமீ 25௳ திருவத்திபுரம் திரு. க. சின்னசாமி முதலியார் அவர்கள் ஷஷ்டி பூர்த்தி முகூர்த்தத்தில் நமது சங்கத்திற்கு நன்கொடையாக அளித்தது ரூ. 1-0-0

15-4-32-ல் நடந்தேறிய உத்தரகிரியை காலத்து நமது சங்கத்திற்குச் ச. கா. குமாருகு முதலியார் மூலம் திரு. கோவை சிங்காரவேலு முதலியார் அவர்க ளளித்த நன்கொடை ரூ 0-4-0

26-9-31-ல் நமது சங்கப் பிரசாரகர் ச. கா. குமாருகு முதலியார் சின்ன தசருக்கு விஜயம் செய்த காலத்து திரு. ஆறுமுக குப்புசாமி முதலியார் அளித்த வரவேற்பு நன்கொடை ரூ. 0-4-0

பொன்பரப்பி திரு. P. S. தங்கவேல் முதலியார் 28-2-32-ல் நமது செங்குந்தர் கல்வி நிதிக்கு நன்கொடையாக மனமுவந்தளித்தது ரூ. 9-0-0

28-2-32-ல் நமது சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாகப் பொன்பரப்பி திரு. P. S. தங்கவேல் முதலியார் அளித்தது. ரூ. 0-8-0

சங்கப் பிரசாரகர் தமிழ்ப்புலவர் வரவேற்பு நன்கொடையாகப் பொன்பரப்பி திரு. தே. அ. பிச்சை பிள்ளை முதலியார் அளித்தது. ரூ. 0-4-0

பொன்பரப்பி திரு. த.மு. வேலாயுத முதலியார் 28-2-32-ல் ச. கா குமாருகு முதலியார் வரவேற்பு நன்கொடையாக மனமுவந்தளித்தது. ரூ. 0-4-0

1-3-32-ல் சிறுகளத்தூர் திரு. தாகு. வீ. ராமசாமி முதலியார் சங்கப்பிரசாரகர் குமருகுரு முதலியார், வரவேற்பு நன்கொடையாக அளித்தது. ரூ. 1-0-0

7-3-32 வாரியங்காவல் திரு. ப. அய்யாசாமி முதலியார் நமது சங்கப்பிரசாரகருக்கு வரவேற்பு நன்கொடையாக அளித்தது. ரூ. 0-4-0

8-3-32 எலையூர் திரு. கா. ச. துரைசாமி முதலியார் நமது பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக அளித்தது. ரூ. 0-4-0

10-3-32 கல்லாத்தூர் திரு. செ. வை. நடராஜ முதலியார் நமது சங்கப்பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக அளித்தது. ரூ. 0-4-0

மூலத்துறை திரு. E. V. துரைசாமி முதலியார் அவர்கள் தமது திருக்குமாரத்தியின் முகூர்த்த காலத்து மனமுவந்தளித்த நன்கொடை. ரூ. 0—8—0

ஷையார் மூலம் உண்டியல் நன்கொடை வரவு அணு. 0—13—0

சிதம்பரம் லால்பேட்டை யூனியன் போர்டு பிரசிடென்ட் திரு. பு. ச. அருணாசல முதலியாரவர்கள் ஆங்கீரஸஹு சித்திரைமீ 15௳ தமது தாயாருக்கு நடத்திய உத்திரகிரியை காலத்தில் அளித்த நன்கொடை. ரூ. 1—0—0

கொல்லங் கோடு பெரியவீட்டைச் சேர்ந்த திரு. K P சுப்பிரமணிய முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்கள் திருமணகாலத்து வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 2—0—0

ஷை குடும்பத்தைச் சேர்ந்த திரு. S. சிவராமன் முதலியார் அவர்கள் திருமணகாலத்து வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 2—0—0

### கீழையூர் சோக்கலிங்க முதலியார் மூலம் ஹரிசேவையில் நன்கோடை வரவு

மாயவரம் தாலுக்கா தலைஞாயிறு திரு. அ. பக்கிரி முதலியார் கிரஹத்தில் ஆங்கிரஸஹு சித்திரைமீ 11௳ சனிக்கிழமை ஸ்ரீ வெங்கிடாஜலபதிக்கு கம்பஸ்தாபனம் செய்வித்து தளிகை நைவேத்தியம் தீபாராதனைகளும் மிக்க சிறப்பாக நடை பெற்றதில் நமது தலைச்சங்கத்தின் கல்வி நிதிக்கு நன்கொடை வழங்கியது. ரூ. 1—0—0

ஷை மீ 5௳ மேலக்கட்டளை மேலத்தெரு திரு. வீ. பாவாடை முதலியாரவர்களின் திருவளர்ச்செல்வி சிவகாமியம்மாள் ருதுஸ்நானத்தில் செங்குந்தர் கல்விநிதிக்கு நன்கொடை வழங்கியுள்ளது. ரூ. 0—8—0

ஷை மீ 26௳ ஆதிவாரம் நாங்கூர் மே. ச. காழி. வேலு முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி. ஆனந்தாயியின் வளையற்காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச்சங்கக் கல்விநிதிக்கு நன்கொடையளிக்கப் பெற்றது. ரூ. 0—8—0

ஷை மீ 29௳ மேலக்கட்டளை மேலத்தெரு ப. பா. கோவிந்தசாமி முதலியாரின் குமாரத்தி ஸ்ரீமதி அரும்பு அம்மாளின் வளையற்காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடை. வழங்கியது. ரூ. 0—8—0

பிரசோற்பத்திஹு பங்குனிமீ 18௳ திருச்சம்பள்ளி ஜவுளி இ. அ. அண்ணாமலை முதலியாரின் அன்னையார் சிரார்த்தத்தின் ஞாபகார்த்தமாக நன்கொடை வழங்கியுள்ளது. ரூ. 0—4—0

### மூன்றாவது மகாநாட்டுக்கு நன்கோடை

திருமயிலை கேடிவ்டாக்டர் திரு. அண்ணாமலை முதலியாரவர்கள் வழங்கிய நன்கொடை. ரூ. 5—0—0

## அறிவிப்பு

சென்னை, செங்கற்பட்டு, வடஆற்காடு, சித்தூர் முதலிய ஜில்லாக்களில் சந்தா வசூலிப்பதற்காக நியமிக்கப்பெற்றிருந்த திரு. காவி. ஷண்முக முதலியா ரவர்கள் தமது தேக சௌகரியத்தைக் குறித்து வேலையினின்றும் விலகிக்கொண்டதால், இனி அன்னாருக்கும் சந்தா வசூலுக்கும் யாதொரு சம்பந்தமு மில்லையெனச் சந்தா நேயர்கட்கு அறிவித்துக்கொள்கிறோம். இனித் தமது சந்தாத் தொகையினை நேராகக் காரியாலயத்திலோ மணியார்டர் மூலமாகவோ தலைச் சங்கப்பிரசாரகர்களாகிய திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், இ. அ. சண்முக முதலியார் ஆகியோர் மூலமாகவோ செலுத்துமாறு ஷை ஜில்லாக்களிலுள்ள சந்தா நேயர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

# சிறிது கவனிக்கலாகாதா?

இரங்கூன் சிங்கப்பூர் முதலிய வெளியூர்களுக்குச் செல்லும், அல்லது அவ்வூர்களிலிருந்து தம்மூர்களுக்குத் திரும்பும் நங்குலப் பிரமுகர்கள் அசௌகரியமின்றித் தங்குவதற்காகவும், வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வந்து கல்வி பயிலும் நங்குல மாணவர்கள் வசதியுடன் தங்கியிருப்பதற்காகவும் நமது தலைச்சங்கம் பத்திரிகை இவற்றின் காரியாலயங்கட்கு உதவுவதற்காகவும், ஒரு கட்டடம் இன்றியமையாததா யுள்ள தென்பதைப் பற்றிப் பன்முறை யெழுதியுள்ளோம். நமது தலைவர்களும் நங்குல மகாநாடுகளிலும் ஏனைய கூட்டங்களிலும் அதைப்பற்றி அழுத்தமாகப் பேசியுள்ளார்கள். அதற்குப் பொருளுதவி செய்யக்கூடிய முறைகளும் அத்தகைய கூட்டங்களில் விளக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்றாவது மகாநாட்டிலும் அதைப்பற்றிய தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேறியுள்ளது. ஆனால் என்ன கூறியும், எப்படி எழுதியும், எவ்வளவு வேண்டியும் நங்குலச் செல்வர்கள் இவ்விஷயத்தில் ஊக்கமெடுத்துக்கொள்ளாது வாளாவிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகவே யுள்ளது. மகாநாட்டுச் சமயம் சில கொடையாளர்கள் நன்கொடை வழங்கினார்களே யொழிய அதன் பின்னர் நன்கொடை வழங்க முன் வந்தவர் ஒருவரேனுமிலர். சென்ற மாதம் சேர்ந்தது நூறு ரூபாயேயாகும். அதுவும் இவ்விஷயத்திற்கு ஆதிகாரணர்களாகவும் இதில் மிகவும் ஊக்கங் கொண்டுள்ளவராகவுமுள்ள பாளையகாட் கம்பெனியாரா லளிக்கப்பட்ட மகமை நன்கொடையேயாகும். ஒரு கட்டடத்துக்குச் சமார் 10,000 ரூபாயாவது வேண்டும் என்பதை அன்பர்க ளறிவார்கள். அவ்வாறிருக்க, இங்ஙனம் இரு கம்பெனியார் தரும் மகமைப் பணத்தைமட்டும் மாதமொருமுறை சேர்த்துக்கொண்டு போவோமானால் அந்தத் தொகை எக்காலத்தில் சேரும்? அது சமுத்திரத்தைத் தூர்ப்பதற்குக் கையால் மண் வாரிப் போடுவதுபோலவே யாகும்.

உதவி செய்ய வேண்டுமென நங்குலச் சீமான்கள் சிலர் மனம் வைப்பாராயின் சொற்ப மாதங்களுக்குள்ளேயே பத்தாயிரமல்ல, ஒரு லக்ஷத்தையும் சேர்த்துவிடலாம். வேடிக்கைகளுக்கும், களிக்கும் எத்தனையோ ஆயிரம் ரூபாய்கள் வாரி யிறைக்கப்படுகின்றன. பிரயோஜனப்படாத இடங்களில் ஒன்றுக்குமே லொன்றாகச் சத்திரங்களும் சாவடிகளும் கட்டப்பட்டுப் பாழடைந்து கிடக்கின்றன. அன்பர்களே! மிகவும் அத்தியாவசியமான இந்த நிதிக்குக் கைங்கரியம் செய்யலாகாதா?

இரங்கூன் முதலிய ஊர்களில் வியாபாரம் செய்யும் நங்குலப் பிரமுகர்களே இதைப்பற்றி வற்புறுத்திக் கூறியுள்ளன ராயினும், தற்போது அவர்களும் இது விஷயத்தில் வாளாவிருக்கின்றனர். நிலைமை யுணர்ந்து இனியேனும் நங்குலச் செல்வர்கள் இத்தருமத்திற்குத் தாராளமாக நன்கொடை வழங்க முன் வருவார்களென எதிர்பார்க்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| சென்ற மாதம் பாக்கியிருந்தது | ரூ. 685 | 0 | 0 |
| இம்மாத வரவு:—மதராஸ் பாளையகாட் கம்பெனியார் வழங்கிய மகமை வசூல் | 65 | 0 | 0 |
| ஆக மொத்தம் பாக்கி யுள்ளது | 750 | 0 | 0 |

நன்கொடை யனுப்புவோர், "திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள், சென்னை பாளையகாட் கம்பெனி, 31, அரண்மனைக்காரன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.

என்ற விலாசத்துக் கனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswami at The Progressive